


மலர் 6—இதழ் 35 ★ 29-12-57 சென்னை ★ விலை 16 காசு

# சென்னைக்குப் பெரிய "நாமம்"

—(0)—

## 35 கோடி ரூபாய் திட்டங்கள் 30 கோடி ஆகின்றன!

—(0)—

## கனம் மந்திரி சென்றார், கண்டார், கரிபூசித் திரும்பினார்.

—(0)—

### சென்றார்! கண்டார்! வென்றார்!

ரோம் நாட்டு ஜூலியஸ் சீசரைப் பற்றி இப்படியொரு பழமொழியுண்டு. சீசரின் பெரும் படைகள் புறப்பட்டால் அவை எந்தத் திக்கு நோக்கிச் செல்கின்றனவோ, அங்கெல்லாம் அவை நிச்சயமாக வெற்றிகளை வாங்கித் தரும். வடக்கில் பிரித்தானிய நாட்டிலிருந்து தெற்கில் பிரமிதுகள் எழும்பிய எகிப்து நாடு வரை, கிழக்கே ஸ்பெயின் நாட்டிலிருந்து மேற்கில் கிரேக்க நாடுவரை சீசரின் பார்வைக்குள் இருந்தன. ரோம் நாட்டு யுத்ததேவதை அங்கெல்லாம் வலம் வந்தது. ரோம் வீரர்கள் உலாவி வந்தார்கள். விழாக் காலங்களிலும் விருந்து மண்டபங்களிலும் "ஹெயில் சீசர்" என்ற குரல் ஒலித்தது. சீசரின் பெயர் எல்லோருக்கும் சிம்மத்தின் குரல்போல ஒலித்தது. சீசர் வருகிறாரென்றால், எதிர்த்து நின்று வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை யாருக்கும் கிடையாது. அதனால் சீசரின் படையெடுப்புக்கள் சில, வெறும் ஊர்வலம் போல், எதிர்ப்பார் எவருமின்றி, எதிர்க்க வேண்டியவர்கள் தலைவணங்கி வரவேற்கும் நிலையில் இருந்தன. போர் என்று மூண்டால், சீசரின் திறமையும் படைவலியும் சண்டையைச் சதுரங்க ஆட்டமாக்கின. எல்லாச் சமயங்களிலும் கடைசியாக வெற்றி முரசு ரோமானிய வீரரால் கொட்டப் பட்டன!

சீசரின் வெற்றிப் பொலிவைக் குறிப்பிட "சென்றார், கண்டார், வென்றார்!" என்று சொல்கிறார்கள். அவர் ஒரு நாட்டுக்குள் சென்று, பார்வையிட்டால் போதும், வெற்றி நிச்சயம்!

சென்னை மந்திரிகளின் வீரப் பிரதாபத்தைச் சொல்ல வேண்டுமென்றால், "சென்றார், கண்டார், வந்தார்!" என்றுதான் சொல்ல வேண்டும்.

மிகுந்த வீரத்தீரத்துடன் அவர்கள் டில்லிக்குச் செல்கிறார்கள்! நேரு பெருமானைத் தரிசனம் காண்கிறார்கள்! கடைசியாக மூக்குடைப்பட்டு, முகத்தில் கரி பூசப்பட்டு, சோகத்துடன் திரும்பி வருகிறார்கள்!

சீசருக்கு ஒவ்வொரு தடவையும் வெற்றி எவ்வளவு நிசசயமாக இருந்ததோ அவ்வளவு நிச்சயமாக நமது சென்னை மந்திரிகளுக்குத் தோல்வி இருக்கிறது!

வெற்றித் தேவதை என்று கூறுவார்கள், தோல்விக்கு ஒரு தேவதை இருக்கிறதோ என்னவோ, அப்படி ஒரு தோல்வி தேவதை ஒன்றிருந்தால், அது நமது கனம் சுப்பிரமணியம் பின்னாலும், பக்தவச்சலம் பின்னாலும், காமராசர் பின்னாலும் கட்டாயம் சுற்றிக்கொண்டுதான் இருக்கும்!

இவர்கள் டில்லிப் பட்டணத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்ற பொழுதெல்லாம், எப்படித் திரும்பிவந்தார்கள்? போய் டில்லி தேவதைகளைப் பார்த்து, வலம் வந்து, பக்தி நாபாவளிகளைப் பாடி, பேச முடியாமல் (?) காமராஜர் கண்ணீர் மல்கி நிற்க, கனைத்துக்கொண்டு சுப்பிர மணியம் குரல் கிளப்ப, அருகிலிருக்கும் பக்தவச்சலம் பக்க வாத்ய இசை கொடுக்க, தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கிறார்கள்! மனுவைக் கொடுத்துக் குனிந்ததுதான் தாமதம், "ஆகா!" தேவதை ஆவேசத்துடன் கிளம்பி, பிடரியிலே ஓங்கிக் கொடுக்கிறது! குப்புற விழுந்து மீசையில் மண் ஒட்டாமல் திரும்பி வருகிறார்கள்! (கனம் சுப்பிரமணியமும், கனம் பக்தவச்சலமும் "மீசையில்லாத சித்தப்பாக்கள்!" மீசையுள்ள அத்தைமார்கள் இருக்கும்பொழுது மீசையில்லாத சித்தப்பாக்கள் இருப்பதில் தவறில்லை! சென்னை மந்திரி சபையில் இருக்கும் எட்டுமந்திரிகளில், காமராஜர் தவிர மற்றவர்கள் யாருக்கும் மீசை கிடையாது, அடிக்கடி குப்புறவிழுந்தாலும் மீசையில் மண் ஒட்டக்கூடாது என அவர்கள் இருந்திருக்கலாம்! காமராசருக்கு அரை மீசை இருக்கிறது. கீழேவிழுந்தால், சிறிது மண் ஒட்டும் அதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை!)

இரா.செழியன்

சென்னை மந்திரிமார்கள் டில்லிக்குச் சென்று எந்தச் சமயத்தில் வெற்றிப்பொலிவுடன் திரும்பி வந்தார்கள் என்று கணக்கிட்டுப் பாருங்கள்!

மாநிலச் சீரமைப்பு வந்தது! முன்பிருந்தமாநிலங்கள் போய் புதுமாநிலங்கள் உருவாகும்சமயம். ஒவ்வொருமாநில அரசாங்கமும் தத்தமக்குரிய பங்குகளைப் பெறுவதில் போட்டியிட்டுக் கொண்டிருந்தன! அந்தப் போட்டியில் கடைசியாக இருந்தது சென்னை மந்திரி சபைதானா! மாநிலச் சீரமைப்புக் குழுவினர் அறிக்கைப்படி, தமிழர்கள் மிகுதியாக உள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துக்குச் சேர்க்கப் படாமல், கேரளத்துக்குத் தரப்படும் என்ற செய்தி கேட்டு, தமிழகமே கொதித்தெழுந்தது. ஆளுங் கட்சியைத் தவிர, மற்றெல்லா அரசியற் கட்சிகளும் ஒன்று திரண்டு தங்களது கண்டனத்தைத் தெரிவித்தன. தமிழ் மக்களின் ஒரு முகப்பட்ட கண்டனம் இருந்தன! சென்னை மந்திரிகள்—காமராசர், சுப்பிரமணியம், பக்தவச்சலம் ஆகிய மும்மூர்த்திகள் தாம் சென்றார்கள். தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் மீது தமிழ் நாட்டுக்குள்ள உரிமைப் பற்றி இவர்கள் மத்திய மந்திரியிடம் "நீண்ட" நேரம் — அதாவது 10 நிமிடங்கள் பேசினார்கள். பலன் என்ன என்றால், தேவிகுளம் பீர்மேடு கிடைக்காதது மட்டுமல்ல, தமிழ் நாட்டுக்குக் கிடைப்பதாக இருந்த செங்கோட்டையிலும் பாதிப் பகுதி போய்விட்டது! கோட்டை விட்ட மும்மூர்த்தி மந்திரிகள் திரும்பி வந்து சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டார்கள்!

சென்றார்கள், கண்டார்கள், கோட்டை விட்டுத் திரும்பினார்கள்!

அதற்கு முன்பு கரைபோட்ட வேட்டியும் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று சென்னை சட்டசபையில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மந்திரி சபை டில்லி ஆட்சி பீடத்துக்கு அனுப்பி வைத்தது. அந்தத் தீர்மானம் அங்கு இருந்த குப்பைக் கூடைக்குள் போய்ச் சேர்ந்தது! மீண்டும் சட்டசபையில் அந்தத் தீர்மானம் பற்றிய பேச்சுவந்த பொழுது, பேசாமடந்தைகளாக மற்ற மந்திரிகள் இருந்தார்கள்! காமராசர் எப்பொழுதும்போல் இருந்து விட்டார்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய பங்கு நமக்குத் தரப்படவில்லை என்ற கூக்குரல் இங்கு எழும்பியதும், அதைக் காங்கிரசுக்காரர்கள் கூடச் சொல்ல ஆரம்பித்ததும், "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விடப் போவதில்லை, பாருங்கள்!" என்று முடுக்குடன் சென்னை அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்தது. 400 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைப் போட்டு, நல்ல நாள் பார்த்து, சகுனம் பார்த்து கனம் சுப்பிரமணியம் கோஷ்டி டில்லிக்குப் பறந்து சென்றது. தங்கள் திட்டங்களை டில்லி சந்நிதானத்தில் சமர்ப்பித்தார்கள்! சந்நிதானத் தம்பிரான் அப்படியே அருள் தரவில்லை! திட்டத்தை இங்கு வெட்டி, அங்கு குறைத்து, 400 கோடியை 200 கோடியாக ஆக்கினார்கள். மந்திரிகள் ஏதோ கேட்க வாயெடுத்தார்கள். ஒரு அதட்

(12-ம் பக்கம் பார்க்க)

கதை

# பண்டிகையும் பகுத்தறிவும்

(நாஞ்சில், செ. அன்பெழில்)

கூட்டத்தின் நடுவே சோபாவில் சாய்ந்தவாறு பகுத்தறிவு இயக்க ஏடுகளைப் புரட்டிக்கொண்டிருந்த திருமாவளவன் திரும்பிப் பார்த்தான் வெற்றிலை பாக்கு, விபூதி,பழம், பூ, தேங்காய், சந்தனம், குங்குமம் இத்யாதிகளைக்கொண்ட வெள்ளித் தட்டை ஏந்தியவாறு கல்யாணி கூடத்தினுள் நுழைந்து கொண்டிருந்தாள். அவள் முகத்திலே என்றுமில்லாமல் ஒரு தனியானந்தம் சதிராடியது. அதற்கும் ஒரு காரணம் உண்டு. இணையற்ற பகுத்தறிவுவாதி என்று அனைவராலும் புகழப்பட்ட தன் கணவன் தலைத் தீபாவளி கொண்டாட தன் வீட்டிற்கே வந்து விட்டானென்றால்...? அவள் பெருமகிழ்ச்சி கொண்டது நியாயம் தானே! அதற்காகவே இன்று ஆண்டவன் சன்னதியில் தனி வேண்டுதல் நடத்திக்கொண்டாள். அதற்காக அர்ச்சகருக்கு இன்று அதிகப்படியாக மூன்று ரூபாய் கொடுத்திருக்கிறாள். அர்ச்சகரும் வாங்கிய காசுக்கு துரோகம் பண்ணாமல் கூடுதலாக கொஞ்ச நேரம் மந்திரத்தை முணுமுணுத்து அர்ச்சனை செய்தார். எண்ணி கல்யாணி பெருமிதம் கொண்டாள்.

''கொலைவாளுக் குறைபோல
விழிவாளுக்கிமையும்
குழையாடுஞ் செவியோடு
உறவாடும் அளவும்
சிலையோடும் சமமாக
விளையாடும் புருவம்
சிறுவானப் பிறைமீது
அலைமோதும் அழகும்''

கல்யாணியின் இயற்கையழகை இன்னும் கொஞ்சம் மிகைப்படுத்திக் காட்டின. அவள் உடுத்திருந்தகொள்ளை காலம் பட்டுப் புடவையும், நீலநிறவெல்வெட் சோளியும் தனிச் சோபையோடு விளங்கின. நிலவன்ன நெற்றியில் தீட்டியிருந்த திரு நீற்றுப் பட்டையும் அதன் மத்தியில் இட்டிருந்த செந்தூரத் திலகமும் கம்பீரமாகக் காட்சியளித்தன. அவளை அள்ளி விழுங்கி விடுவதுபோல வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் திருமாவளவன். கல்யாணியின் அழகுப் போதையிலே வளவன் மயங்கியிருக்கவேண்டும்!

பேரானந்தத்தோடு வீட்டினுள் நுழைந்த கல்யாணியின் கண்கள் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த வளவனின் தோற்றத்தைத் தொட்டுப் பார்த்தன. விரைந்து வந்த அவள் நடையிலே ஒரு தயக்கம், மகிழ்ந்திருந்த மனதிலே ஒரு மயக்கம். ஏதோ ஒரு குற்றத்தை செய்து விட்டது போன்ற ஓர் அச்ச உணர்ச்சி அவளது உடலை நடுங்க வைத்தது. அவன் முகத்திலும் முத்துப்போல் வியர்வைத்துளி வரிசை கட்டியது. வெள்ளித் தட்டை ஒரு கையில் ஏந்திக் கொண்டு மறுகையால் வியர்வையைத் துடைத்தாள். விபூதியும்,குங்குமமும் வியர்வையிலே கரைந்து விழுந்தன. ஒதுங்கிச் சென்று கொண்டிருந்த அவளை வளவன் அருகே வருமாறு அழைத்தான்.

வெள்ளித் தட்டை மேசைமேல் வைத்துக்கொண்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள் கல்யாணி வளவனின் விழிகள் வெள்ளித் தட்டை வட்டமிட்டான். "ஏன் கல்யாணி கோயிலிலிருந்து வருகிருயா அன்பொழுகக் கேட்டான்.

தலையைக் குனிந்து கொண்டாள் கல்யாணி. பதில் ஏதும் அவள் பேசவில்லை.

"ஏன் வெட்கமா?" அவன் தான் பேசினான்.

"நீங்கள் ஏன் கோயிலுக்கு வர மறுத்து விட்டீர்கள்?', பதில்கேட்டாள் அந்த பாவை.

"கோயில் விபச்சார விடுதி, திருடர்கள் குகை என்றெல்லாம் உத்தமர் காந்தியார் கூட சொல்லியிருப்பதால்." அவள் வளவன் தொடர்ந்தான். "நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பம் சார்த்தியே, சுற்றி வந்து மொணமொணென்று சொல்லும் மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ? நாதனுள்ளிருக்கையில்" என்று சிவவாக்கியர் கேட்டதால், "கண்டவிட மெல்லாங் கடவுள் மயமென்றறிந்து, கொண்ட நெஞ்சர் நேய நெஞ்சிற் கொண்டிருப்ப தெந்நாளோ?" என்று தாயுமானவர் வினவியதால், "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக" என்று வடலூர் இராமலிங்க அடிகளார் கடிந்துரைத்த காரணத்தால், "ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி, அலையும் அறிவிலிகாள்! - பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்டாமெனல் கேளிரோ?" என்று பாரதியார் கூறியிருப்பதால், "கோயில் முழுவதும் கண்டேன் உயர் கோபுரம் ஏறிக்கண்டேன், தேவாதி தேவனையான்-தோழி, தேடியுங் கண்டிலனே" என்று கவிமணி உரைத்திருப்பதால்..." திருமாவளவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

"அத்தான்! போதும்... போதும்..." கல்யாணி அலறினாள், மன்னித்து விடுங்கள் அத்தான் இனிமேல் ஒருநாளும் போகமாட்டேன்"

"இந்த திடீர் முடிவு கூடாது கண்ணே! தீரயோசித்துப்பார். அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று குருட்டு நம்பிக்கை எதன்மேலும் கொள்ளாதே. உன்னை நான் கோயிலுக்குப் போகாதே என்று அடக்கு முறையால் தடுத்திருக்க முடியும். ஆனால் அது அறிவுடையோன் செயலல்ல. நீயே எண்ணிப் பார்த்து முடிவு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் காரணத்தால் தான் நான் இது வரை கோயிலுக்குப் போகாதே என்று உன்னை தடுத்ததில்லை..." பொதுக் கூட்டத்தில் பேசுவதுபோல தன் இதயத்தில் தோன்றிய கருத்துக்களை அடுக்கிக் கொண்டு போனான். கல்யாணியும் தன் கணவன் கூறுகின்ற புதிய புதிய தத்துவங்களை எண்ணிப் பார்த்து மகிழ்ந்தாள்.

"அத்தான், முன்னேற்றக் கருத்துக்களையெல்லாம் அழகாகப் பேசுகின்ற நீங்கள் முதல் தீபாவளி கொண்டாட வந்து விட்டீர்களே, ஏன்?" கல்யாணியின் முகத்தில் இடம் பெற்றிருந்த ஐயம் வெளிப்பட்டது.

"நீமட்டு மென்ன, மாமனும் ஊரிலுள்ளோரும் அப்படித்தான் எண்ணியிருப்பார்கள். ஆனால் என் வருகையின் பின்னல் ஒரு கதை மறைந்திருக்கிறது."

"அந்த கதையைத்தான் சொல்லுங்களேன்!"

"இப்பொழுது வேண்டாம் கண்ணே! சமயம் வரும்பொழுது நீயே புரிந்து கொள்வாய்"

கல்யாணியும் வளவனும் இன்பகரமாகப் பேசிமகிழ்ந்தனர். அவர்களிருவரும் மணவாழ்விலே இணைந்து ஐந்து மாதங்கள் தான் ஆகின்றன. இந்த குறுகிய காலத்தின் பெரும் பகுதியை வேலையின் நிமித்தம் சென்னையில் செலவிட வேண்டிய கட்டாய நிலைமைக்கு உள்ளானன் வளவன். ஏதோ ஒரு வாய்ப்பு புரிந்து வாழ்ந்த காதலர்களைச் சேர்த்து வைத்தது.

**கல்யாணியின் தந்தை கனகசபை முதலியார் அரியலூரில் பெயரும் புகழும் பெற்ற காங்கிரசுக்காரர் சென்ற பொதுத்** தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றிதேடித்தர அவர் செய்த பஞ்சதந்திரச் செயல்கள் முன்னணி காங்கிரசுக்காரர்கள் பட்டியலிலே அவருக்கும் முதன்மையான இடத்தை தேடித்தந்தது, 1942ல் நடந்த ஆகஸ்டு புரட்சியின் போது தந்திக்கம்பியை அறுத்து, தபாலாபீசைக் கொளுத்தி, தண்டவாளத்தைப் பெயர்த்து சுதந்திர போராட்டத்தை நடத்திய 'அகிம்சா வீரர்களுக்குத் தலைமை தாங்கி, அதன் காரணத்தால் ஆங்கிலேய அரசாங்கத்தின் விருந்தாளியாக சிறைச்சாலையில் ஆறுமாதங்கள் இருந்தார். அவர் காங்கிரசுக்காரரான நிலை ஒரு சுவையான கதை.

அப்போது திருமணமாகாத கட்டிளங்காளை கனகசபை முதலி. முரட்டு உடலும், உருட்டும் விழிகளும், மக்களை மருட்டும் குணமும், யாரையும் எதிர்த்து விரட்டும் பண்பும் கொண்டவர். காங்கிரசுக்காரர்கள் தீவிரமாக போராட்டம் நடத்தி வந்தனர். அவர்களை வேட்டையாடுவதிலே வெள்ளை அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. கதர் சட்டை போட்டிருப்பவர்களெல்லாம் காங்கிரசுக்காரர்களாக அவர்கள் கண்களுக்கு தோற்றமளித்தனர். கனகசபை முதலி சீமான் செல்வரங்க முதலியார்க்கு வலது கை. அவரது காடு, கழனி, தோப்பு துரவுகளை மேற்பார்வை பார்க்கவும், அடிபிடிதகராறு தாவா இத்யாதிகளில் பக்கபலமாக நின்று நடத்தவும் கனகசபையை செல்வரங்கம் பயன்படுத்தி வந்தார், போராட்டத்துக்கு நிதி சேர்க்க வந்த காங்கிரசுக்காரர்கள் கட்டாயப்படுத்தி செல்வரங்கத்தின் தலையிலே ஒரு கதர்த்துணியைக் கட்டி விட்டார்கள். வேண்டாவெறுப்பாக அதை ஏற்றுக் கொண்ட சீமான் விருப்போடு பரிசாக கனகசபைக்குக் கொடுத்தார். ஓசியில் கிடைத்த துணியில் அழகாக வட்டக் கழுத்து சட்டை தைத்து அணிந்து கொண்டார். ஏற்பட்ட கலவரத்தில் இந்த சட்டை அவரை காங்கிரசுக் கட்சியில் சரணடையச் செய்து விட்டது. கலவரத்தோடு கலவரமாக கனக சபையும் சிறைப்பட்டார். 'பிடித்த கொம்பு புளியங்கொம்பு' என்றறிந்ததும் கட்சியிலேயே நிலைத்துவிட்டார். இது தான் அவர் வாழ்விலேயே ஒரு திருப்புமையமாக அமைந்த 'அரசியல் நுழைவுப் படலம்' தன் ஒரே மகளின் திருமணத்தை எப்படி நடத்துவது என்று அவர் ஏங்கிக் கொண்டிருந்த வேளையில் கிடைத்த 'தியாக மான்யம்' அவரை கை தூக்கிவிட்டது. அமைச்சரவையில் அவர் கொண்டிருந்த செல்வாக்கும், ஆளும் கட்சியில் அவர் பெற்றிருந்த மதிப்பும் பல துறைகளிலும் அவருக்குத் துணை செய்தன.

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 29—1—57 சென்னை

# தென்னாட்டுத் தீர்மானம்!

★

[illegible]

ஆட்சி மொழியாக இந்தியைக் கட்டாயப்படுத்தும் முயற்சிக்கு தென்னகம் எதிராக உள்ளது என்பதை அறிவிக்கும் முறையில், தென்னாட்டு ஆட்சிமொழி மாநாடு சென்னையில் நடந்தேறியது! தென்னகத்தின் அரசியலிலும் பொதுவாழ்விலும் பெரும் பங்குகொண்ட சிறந்த நல்லறிவாளர்கள் பலர் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு, இந்தித் திணிப்பிற்குத் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்! வெறும் அரசியல் மாறுபாடுகளை மனதில் வைத்துக்கொண்டு அவர்கள் பேசினார்கள் என்று கூறிவிட முடியாது. அவர்களில் பலர் அரசியலிலும் அரசாங்கப் பதவிகளிலும் மற்றத் துறைகளிலும் உயர்ந்த இடங்களையடைந்து சிறப்பெய்தி, இப்பொழுது ஓய்வுபெறும் நிலையிலிருக்கின்றவர்கள்! ஆளுங்கட்சிக்கு எதிராக ஒரு அமைப்பையோ எதிர்ப்பையோ உண்டாக்கவேண்டிய அவசியத்தில் இல்லாதிருப்பவர்கள்! இருந்தாலும், அரசியலிலிருந்து ஒதுங்கியவர்களும், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் இந்தத் தென்னிந்திய ஆட்சிமொழி மாநாட்டைக் கூட்டி, தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர்!

இந்தி ஆட்சி மொழியாக வருவது என்பது, இன்றைக்கு ஒரு மொழிப் பிரச்சினையாகவோ அரசியல் கொள்கையாகவோமட்டும் இல்லை என்பதை இது நன்கு காட்டும். தென்னாட்டு மக்கள் எல்லோருடைய எதிர்காலத்தையும், அவர்களுடைய வாழ்வு தாழ்வுகளையும், நிர்ணயிக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது! இந்தி ஆட்சிமொழியாவதைத் தடுத்து நிறுத்தினால்தான், தென்னாட்டின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அந்த நிலைதான், டாக்டர் சி. பி. இராமசாமி, மிர்சா இஸ்மாயில், சி. இராசகோபாலாச்சாரியார், எம். இரத்தினசாமி, பி. டி. இராசன், பி. கோதண்டராவ் போன்றவர்களை ஒன்றாக அழைத்துள்ளது. இவர்கள் ஒருமுகமாக நின்று "இந்தி ஒருபோதும் வேண்டாம்!" என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள்! மிக அமைதியான அரசியல் போக்கும் சாதுவான தன்மையும், அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமில்லாமலும் இருப்பவர்கள் அன்று மிக ஆவேசத்துடன் பேசினார்கள்! "இந்தி என்றைக்குமே வேண்டாம்!" என முழக்கமிட்டனர்.

"இந்தி வேண்டாம்" எனத் திராவிட முன்னேற்றக் கழகம் கூறியபொழுதெல்லாம், கிடைத்த பழிச்சொற்களும் தூற்றல்களும் ஏராளம்! நாசகாலர்கள், தேசத்துரோகிகள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டோம்! நமக்கேகூட சில சமயங்களில், "நாம் கூறுவது தவறுதானோ?" என்ற ஐயப்பாடு உண்டாகும். அந்த ஐயம் நீங்கும்வகையில், இப்பொழுது தென்னாட்டு ஆட்சிமொழி மாநாட்டில் நல்லறிவாளர் பலர் தங்கள் கருத்துக்களைத் தந்துள்ளனர்.

"ஆங்கிலத்தை அகற்றி, இந்தியைக் கொண்டுவருவது எந்தவகையிலும் பயன் தராது!" என அரசியல் சட்ட அறிவில் மிக மேதாவியும், கல்வித்துறையில் சிறந்த அனுபவமுடையவரும், முன்பு பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும் இருந்த பேராசிரியர் டாக்டர் எம். இரத்தினசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்!

"அரசாங்க மொழியாக இந்தி திணிக்கப்படுவதை நாம் பலமாகக் கண்டிக்கிறோம். இது நமது கடமைகளில் ஒன்று." எனத் தென்னாட்டுக்கு வரும் பேராபத்தை அறிவித்து கடமையுணர்ச்சியுடன் மிர்சா இஸ்மாயில் அவர்கள் பேசியுள்ளார். மிர்சா இஸ்மாயில் அவர்கள் இந்திய அரசாங்கத்தில் மட்டுமல்ல, உலக அரசாங்கத்திலும் சிறந்த மதிப்பு எய்தியவர் 1951இல் இந்தியாவின் பிரதிநிதியாக ஐ. நா. சபைக்குச் சென்றவர்.

"இந்தியை விடாப்பிடியாக வற்புறுத்துவது மற்றவர்களின் கலாசாரங்களுக்கு அநீதி இழைப்பதாகும். இன்னும் தொடர்ந்து செய்யப்பட்டால், மற்றவர்களின் இலக்கிய, கலாசார, அரசியல் வளர்ச்சிகளைத் தடைசெய்வதாகும்!" என உயர் அரசியல் பதவிகளில் இருந்து பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், இருந்த டாக்டர் சி. பி. அவர்கள் எச்சரித்துள்ளார்.

"பேராபத்து நெருங்கி வருகிறது. கடுமையான போராட்டத்துக்குத் தயாராகவேண்டும்!" என சி. ஆர். அவர்கள் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

"இந்தியும் ஆங்கிலத்தைப்போலவே நமக்கு அந்நிய மொழி, ஆனால் ஆங்கிலத்தினால் கிடைக்கிற அனுகூலங்கள் இந்தியால் கிடைக்காது. எனவே இந்தித் திணிப்பு வேண்டாமென்கிறேன்" எனக்கன்னட நாட்டுப் பிரமுகர். பி. கோதண்டராவ் தெரிவித்தார்.

"பாராளுமன்றத்தில்பெரும்பான்மையாகஇருப்பதால் வடநாட்டிலிருப்பவர்கள் இந்தியைத் திணிக்க முயல்கின்றனர். அதிகாரம் தவறான வழியில் பிரயோகிக்கப்பட்டால் குழப்பமும் எதிர்ப்பும் உண்டாகும்" என பி. டி. இராசன் தெரிவித்தார்.

மற்றவர்கள், நம்மைப்போன்ற எதிர்க்கட்சியினர் கூறினால் கூட ஒதுக்கிவிடலாம்! ஆனால் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கும் இந்தப் பெரியவர்கள் —நேரு அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடிய கடைசி நண்பர்கள்—தென்னாட்டில் அரசியல் அனுபவத்தாலும் பதவிச் சிறப்பாலும் மேன்மை பெற்றவர்கள்—இவர்கள் தரும் யோசனைகளைப் பண்டிதர் கேட்பார் என்று நினைக்கிறோம்!

இந்தக் கடைசி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டால்தான், பண்டித நேருவுக்கு நல்லது; அவர் அகில உலகத்திலும் பெற்றுள்ள பெருமைக்கும் புகழுக்கும் நல்லது! தென்னாட்டுக்கு நல்லது, தென்னாட்டை விட வடநாட்டுக்கும். வடநாட்டு இந்திக்கும் நல்லது! ஆட்சி மொழி மாநாட்டில் காலையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் முதல் பகுதியில் காட்டப்படும் காரணங்களில் ஒரு சில நம்மால் முழுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றபோதிலும், அவர்கள் தந்துள்ள முடிவு-"இந்தி ஆட்சி மொழியாகப் புகுத்துவது கூடாது" என்ற கண்டிப்பான எதிர்ப்பு தென்னாட்டு மக்களின் முழு ஆதரவையும் பெற்றுள்ளதாகும். இதை மத்திய அரசாங்கம் அலட்சியம் செய்யுமேயானால் தென்னாட்டையே அலட்சியம் செய்வதாகும்!



**மன்றம் வார இதழின் சந்தா விபரம்**

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 15·00 |
| ஓராண்டு | ... | ரூ. | 8·00 |
| ஆறுமாதம் | ... | ரூ. | 4·00 |
| தனி இதழ் | ... | | 16 காசு |

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 18·75 |
| ஓராண்டு | ... | ரூ. | 10·00 |

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ... | 20 காசு |

# “இந்தி எப்போதும் வேண்டாம்!”

—(0)—

[சென்னையில் 22—12—57 ஞாயிறு காலையில் மயிலை சீனுவாச ...ாஸ்திரி மண்டபத்தில் “தென்னிந்திய ஆட்சிமொழி மாநாடு” சிறப் ...ான முறையில் நடைபெற்றது. தென்னாட்டிற்குப் பயங்கரப் பேராபத் ...ாக வந்துகொண்டிருக்கும் இந்திப் பிரச்சினையைக் குறித்து, தென்ன ...ந்து நல்லறிவாளர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தார்கள். “தென்னாட்டின் ...து இந்தி திணிப்பது கூடாது” என்பதை வலியுறுத்திப் பேரறிவாளர் ...ள் பலர் உரையாற்றினார்கள். அந்தப் பேச்சுக்களில் சில, இங்கு ...ொழிபெயர்த்துத்தரப்படுகின்றன.]

★

## ஆட்சி மொழியில் இந்தி வெறி!

—0—

### அரசியல் ஒழுங்கைக் குலைக்கும்.

—(0)—

### பேராசிரியர் இரத்தினசாமி அறிவுரை!

—(0)—

...ரவேற்புக் கழகத் தலைவர் பேரா...ர் எம். ரத்தினசாமி அவர்கள் ...யதாவது:

“இப்பொழுது நம் முன் ...ள்ள பிரச்சினை எந்த மொழி ...ரசாங்க மொழியாகவேண்டு ...ன்பது ஆகும்; எந்த மொழி ...சிய மொழி என்பதல்ல. ...னனில் தேசியம், தேசிய ...ொழி என்ற பெயரில் வீண் ...ாதங்களும், கோபதாபங்க ...் காட்டப்படுகின்றன.

இந்தப் பிரச்சினையில் ஆராய் ...பார்க்கும் தன்மையும், எது ...திகமாகப் பயன்படும் என்ற ...ேக்கோளும்தான் முக்கிய ...வைகளாக இருக்கவேண் ... ஆங்கிலமொழியின் மூலம், ...ர்ந்து பண்பட்ட நிலையிலி...த சட்டசபை முறைகளை ...நீதி நிர்வாக அமைப்புக ...யும் நாம் ஏற்றுக்கொண் ...ாம். மிக ஒழுங்கான ஆட்சி ...றைக்கு அதுவழிகோலியது.

ஆங்கிலம் வேண்டாம் என் ...றது ஆட்சிமொழிக் குழுவி ...னர் தந்த காரணங்களில் ...று, அது 100க்கு 90 பேர் ...க்கு இந்த நாட்டில் தெரி ...து என்பதாகும். நாமும் ஒரு ...ள்வியைத் திருப்பிக் கேட்க ...டியும். இந்த நாட்டில் 100க்கு ... பேர்களுக்கு எழுதப்படிக் ... தெரியாது. அதைவைத் ... பார்த்தால் இந்தி மாநிலங் ...ில் 100க்கு 20 பேர்களுக் ... தான் எழுதப் படிக்கத் ...ியும். இந்தியல்லாத மாநி ...ளில் 100க்கு 5 பேர்க ...ளுக்கூட இந்தி வாசனை ...யுமா என்பது சந்தேகம். ...த நிலையில் இந்தி ஆட்சி ...ொழியாக்கப்பட்டால், அர...சு நிர்வாகம் இந்தி ...ந்த இடங்களில் 100க்கு ... பேர்களுக்கும், இந்தி தெரி...த இடங்களில் 100க்கு 5 பேர் ...க்கும்தான் புரிய முடியும். ...கு 1 குறைவாகக்கூட இந்தி தெரிந்தவர்கள் சில இடங்களில் இருக்கிறார்கள்.

ஆட்சி மொழியை நிர்ணயிப்பதற்கு முன், அரசாங்க நிர்வாகங்களை நடத்துவதற்கான தன்மைகளை நாம் நன்கு உணர வேண்டும். ஆங்கிலத்தை அந்நிய மொழியென நாம் எவ்வளவு தான் வெறுத்தொதுக்க முயன்றாலும், நிர்வாகத்துறையில் பல முறைகளையும் பழக்கங்களையும் ஆங்கிலம் உண்டாக்கியிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. வேறு எந்த நாட்டிலும் அந்நியமொழியொன்று ஆட்சிமொழியாக இல்லையென்று ஆட்சிமொழிக் குழுவினர் கூறியுள்ளனர். 18 வது நூற்றாண்டு பிற்பகுதி வரை பல நாடுகளில் லத்தீன் மொழியில் தான் அரசாங்கத்தின் முக்கிய குறிப்புகளும் அறிவிப்புகளும் எழுதப்பட்டிருந்தன. உலக அரங்கில் சில காலம் முன் வரை பிரெஞ்சு மொழி முக்கிய உலக மொழியாக இருந்தது. இந்த எடுத்துக் காட்டுகளையெல்லாம் விட நாமே ஏன் புதிதாக ஒன்றை அரசியலில் செய்துகொள்ளக் கூடாது என்று கேட்கிறேன். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இந்நாட்டில் பெரும்பகுதியாக இருக்கின்றனர். இருந்தாலும் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை எனத் தைரியமாக அரசியல் சட்டத்தைச் செய்தோம். இந்த வகையில் புதுமையாக ஒன்றை நாம் செய்து காட்டவில்லையா? அது குறித்து நாம் பெருமைப்படுவதல்லாமல் பிறநாட்டினரும் பாராட்டுகின்றனர். அதைப்போல் ஆட்சிமொழியைத் தேர்ந்தெடுப்பதிலும் நாம் ஏன் பெருமைப்படும் விதத்தில் செய்துகாட்டக் கூடாது?

ஆங்கிலம், இந்தி இரண்டையும் ஆட்சிமொழிகளாக வைத்துக்கொள்ளலாம் எனச் சென்னை மாநில அரசாங்கம் தெரிவித்துள்ள யோசனை, புதிய சிக்கல்களை உண்டாக்குவதாகும். இப்பொழுதுள்ள நிலைமையில், இந்திய அரசாங்க நிர்வாகத்தின் மீது காணப்படும்பெரியகுறைபாடு, காரியங்கள் மிக மந்தமான முறையில் தாமதிக்கப்படுகின்றன என்பதாகும். இரண்டு மொழிகள் வைக்கப்பட்டால் மொழி பெயர்ப்பு என்ற வேலையும் சேர்ந்து இப்பொழுதுள்ள தாமதம் இன்னும் அதிகமாகும். உயர்ந்த பண்பட்ட மொழியுடன் பக்குவமடையாத மொழியைச் சேர்த்து ஒன்றாக வைப்பதால், இன்னும் பல சிக்கல்கள் உண்டாகும் நல்ல நாணயத்தைவிடக் கெட்டுப் போன நாணயம் வேகமாகக் கைக்குக்கை மாறி அதிகமாகச் சுற்றிவருவதைப் போல, குறைந்த வளர்ச்சியுடைய மொழி நல்லதொரு மொழிப் பண்பை விரட்டிட முயலலாம். ஆங்கிலம், இந்தி இரண்டும் ஆட்சிமொழிகளானால், வடநாட்டு-தென்னாட்டு பேதம் இன்னும் நன்றாக வெளிப்படும். ஆங்கிலம் வேண்டியதில்லையென்றால், முக்கிய மொழிகளாக உள்ள 14 அல்லது 15 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குவதைத் தவிர வேறு வழியில்லை”

## இந்தித் திணிப்பை எதிர்ப்பது நமது கடமையில் ஒன்று!

—(0)—

### காலப்போக்கை கண்மூடித்தனமாக எதிர்க்கவேண்டாம்.

—(0)—

## சர். மிர்சா இஸ்மாயில் எச்சரிக்கை!

—(0)—

**மாநாட்டுத் திறப்பாளர் சர். மிர்சா இஸ்மாயில் அவர்கள் பேசியது:-**

அரசாங்க மொழியாக இந்தி திணிக்கப்படுவதை மிக வன்மையாக எதிர்க்கிறோம். இது நமது கடமைகளில் ஒன்று என நம்புகிறோம். இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டுவருவதற்கு, இந்தியாவிலுள்ளவர்களை எல்லாம் ஒற்றுமைப் படுத்தி வைக்க வேண்டும் என்ற காரணம் முதன்மையாகக் காட்டப்படுகிறது.

இயல்பாகவும் வரலாற்று வழியாகவும வளர்ந்து உண்மையாகவே ஒரு தேசியமொழி மட்டும் இருந்தால், இந்தக் காரணம் சரியாக இருக்கலாம். ஆனால் இந்தி ஒரு பகுதியில் உள்ளவர்களால் மட்டும் வழங்கப் படுகிற மொழியாக இருக்கிறது. அந்தப் பகுதி பெரியதொரு பகுதியாகக்கூட இருக்கலாம். ஆனால் மற்ற பல பகுதிகளில் அது வழங்கப்படவில்லை. வழக்கத்திற்குக் கொண்டு வருவதென்றால்கூட வலிந்து தரப்படும் செயற்கை வளர்ச்சியாக அது இருக்கும். மிகப் பலருக்கு அந்நியது எனக் கருதப்படுகிற ஒன்றைக் கட்டாயப் படுத்துவதன் மூலம், எல்லோரும் ஒன்று என்ற உணர்வை உண்டாக்கி விட முடியாது. உண்மையாகக் கூற வேண்டுமானால், இப்படி வலுக்கட்டாயப் படுத்தி இந்தியைத் திணிப்பதால் அது, வேறுபாடுகளை வலியுறுத்துவதாகவும் அதிகப்படுத்துவதாகவும் முடியும்.

முதலாவது அவர்கள் குறிப்பிடும் மொழியின் பெயர் ‘இந்தி’ என்பதைவிட “இந்துஸ்தானி” என்பது பொருந்தும். ‘இந்தி’ என்பது தவறான பெயர். மகாத்மா காந்தி அவர்கள் ‘இந்துஸ்தானி’ என்றே அழைத்தார்கள். அகில இந்திய ரேடியோவில் ஒலி பரப்பப்படும் இந்தி, வளர்ச்சியடையாத, முடங்கிப்போன அளவுக்கு மீறி வடமொழிச் சொற்கள் திணிக்கப்பட்ட ஒரு மொழியாகும். அது கவர்ச்சிகரமாக இல்லை என்பதோடு பலருக்குப் புரியவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

வடக்கிலுள்ள நமது நண்பர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சற்று நிதானித்து அமைதியுடன் யோசித்து முடிவுக்கு வாருங்கள் என்பதாகும். ஒழுங்கையும் ஒன்றுபட்ட அமைதியையும் குலைக்கும் காரியங்களில் ஈடுபட வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தக் காலத்தில், விளம்பரத்தாலும் அச்சுறுத்துவதாலும் அரசாங்கத்தால் பல காரியங்களைச் செய்துவிட முடியும். ஆனால் சில சமயங்களில் சிக்கலான பிரச்சினைகளைக் காலத்தின் போக்குக்கு விட்டு முடிவு காண்பது நல்லது. காலப் போக்கில் கனிந்து வருகிற முடிவு நல்லதாகவும் திருப்தியளிப்பதாகவும் இருப்பது தெரியும். ஆதலால் ‘சற்றுப்பொறுங்கள், பொறுங்கள்!’ எனக் கூற வேண்டியிருக்கிறது. இந்தியை

(9-ம் பக்கம் பார்க்க)

# ★ ஆதாரக் கல்வி ஆகாத திட்டம்!

—()—

(நாஞ்சில். செ. அன்பெழில்)

—()—

இந்தியத் துணைக்கண்ட ஆட்சிப் பொறுப்புகளை காங்கிரசுக் கட்சி ஏற்று நடத்த துவங்கிய பிறகு கல்வித்துறையில் எத்தனையோ பல நிலையற்ற மாறுதல்களைச் செய்து முடித்தது. நாட்டிலே ஏற்பட்டுத் துகின்ற நிலையற்ற மாறுதல்கள் சமுதாயத்தையே கெடுக்க வல்லவை என்பதை மறந்து நடக்கின்றார்கள் அரசினர். அதிலும் குறிப்பாக கல்வித் துறையில் ஏற்படுத்துகிற மாறுதல்கள் வளர்ந்து வரும் சமுதாயத்தை, நாட்டின் நரம்புகளை, மலர இருக்கும் அரும்புகளைக் கெடுப்பதாகவே முடியும். விருப்பக்கல்வி, கட்டாயக் கல்வி, புதிய கல்வி, தொழிற் கல்வி, ஆதாரகல்வி என்றெல்லாம் எத்தனையோ பல திட்டங்கள் புகுத்தப்பட்டு, மாணவர்களில் பெரும் பகுதியினரைக் கெடுத்த பிறகு, திட்டங்கள் தோல்வியையே முத்தமிட்டிருக்கின்றன. காரணம் கல்வித்துறை வல்லுநர்களோடு கலந்து ஆலோசிக்காமல், அவர்களுடைய அரிய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் கல்வி அமைச்சரின் மூளைக்கு எட்டிய வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்ட சபையில் கை தூக்குவதற்கு கட்சிப் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தில் சட்ட சபையில் கொண்டு வந்து அவற்றை சட்டமாக்கி விடுகின்றனர். இந்த வகையில் உருவான ஆதாரக்கல்வி நாட்டுக்கு ஆகாத திட்டமாகவே காட்சியளிக்கிறது.

ஆரம்பப்பள்ளி படிப்பு காலத்தை நான்கும் மூன்றும் என்றவகையில் ஏழு ஆண்டுகளாக மாற்றியுள்ள சட்டசபை, ஆரம்பப் பள்ளியைச் சிறுகச் சிறுக ஆதாரப்பள்ளியாகவும் மாற்றவேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறது. அதுபோலவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் ஆதாரப் பயிற்சிப்பள்ளிகளாக மாற்றவேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆரம்பக்கல்வித் திட்டம் இன்றும் சோதனைக் கட்டத்திலேயே இருக்கிறது. மூதன் முதலாக குக்கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் மட்டுமே இத்திட்டம் அமுல் நடத்தப்படுமாம். நகரங்களிலுள்ள பள்ளிகளில் இந்த திட்டம் புகுத்தப்படாதாம்-இந்த வேற்றுமை உணர்ச்சி ஆள்வோரின் நச்சு மனப்பான்மையை நாட்டுக்கு உணர்த்துகிறது. ஆதாரக் கல்வி நல்லதொரு திட்டமாக இருக்குமானால் அதை நகரங்களிலே அமுல் நடத்தாமல் பட்டிக் காட்டுப் பள்ளிகளிலே மட்டும் புகுத்தப்படுவது ஏன்? காரணம் ஆதாரக்கல்வி திட்டத்தின் வெற்றியிலே ஆள்வோர்க்கு ஐயம் ஏற்பட்டுள்ளது, அதோடு, கல்வியறிவு பெற்ற நகரவாசிகள் ஆகாத திட்டத்தைக்கொண்ட ஆதாரப் பள்ளிக்கு நிச்சயமாகத் தங்கள் குழந்தையை அனுப்ப மாட்டார்கள் என்பது உறுதி. அதனால்தான் கிராமங்களில் வாழும் பாமரர்களை ஏமாளிகள் என்று எண்ணி அடிப்படையற்ற இத்திட்டத்தை அவர்கள் தலையில் கட்டுகின்றனர்.

பண்டைக்காலத்தில் வாழ்ந்து வந்த மன்னாதி மன்னர்கள் தங்களுக்கு எத்தனையோ பல பாதுகாப்புகளை ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்தனர். அந்த பாதுகாப்பாளர்களுள் ஒரு வகையினர் 'உண்டு காட்டிகள்' என்று அழைக்கப்பட்டனர். அரசர்கள் உண்பதற்கு முன்னர் அரசர் உண்ண வேண்டிய உணவுவகைகள் இந்த உண்டு காட்டிகளுக்கே பரிமாறப் படும். உண்டு காட்டிகள் உணவு உட்கொண்ட பிறகு அரசர் உணவில் நஞ்சு ஏதும் இல்லை என்று உணர்ந்து, தெளிந்து உண்ணத் துவங்குவாராம். அதுபோலவே பட்டிக்காடுகளிலே வாழும் பாமரர்களை பாரதமாதா புத்திரர்கள் இன்று உண்டு காட்டிகளாக உருமாற்றியுள்ளார்கள். ஏழைகளுக்காக வாழ்ந்தார் காந்தியடிகள். இன்று அந்த ஏழைகளை ஏமாளிகளாக்குவதிலே பெருமை கொள்கிறது காங்கிரசுக் கட்சி.

இந்த ஆகாத திட்டத்தைப் பற்றி 1954ல் இராச புதனத்துப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அறிவுரை வழங்கிய கல்வித்துறை வல்லுநர் சர். மிர்சா இசுமாயில் என்பார் "ஆதாரக்கல்வி முறையால் இரண்டுவித பேராபத்துக்கள் உண்டாகின்றன, முதலாவதாக விற்பனை செய்ய வல்ல பொருட்களை ஏதாவது சில கைத்தொழில்களைக் கற்றுக் கொள்வதன் மூலம் இளஞ் சிறுவர்கள் செய்ய வேண்டு மென்பது இரண்டாவதாக புத்தகங்களைப் படிப்பதன் மூலம் அறிவு விளக்கம் பெறுகிற முறையைக் குறைத்துக்கொள்ள வேண்டு மென்பது இந்த இரண்டு கருத்துக்களும், மக்களை நாகரிகப் பாதையிலிருந்து திருப்பி, அநாகரிகத்துக்கு அழைத்துச் செல்வதாகும் மேலும் கல்வித்துறையின் நோக்கத்தையே மறுத்து இளம் சிறுவர்களையெல்லாம் ஆலைத்தொழிலாளர்களாக மாற்றுவதாகும்" என்று கருத்து தெரிவித்துள்ளார்கள். ஆதாரக் கல்வி திட்டம் மாணவர்களை அநாகரிகத்துக்கு அழைத்துச் செல்வது என்றும் ஆலைத்தொழிலாளர்களாக மாற்றுவதென்றும் கூறி வன்மையாகக் கண்டித்திருப்பது உன்னிப்பாக கவனிக்கத்தக்கது.

வேண்டாத இத்திட்டத்தில் பாட நூற்களின் பயன் புறக்கணிக்கப் படுகிறது, தொழில் மூலம் கல்வி புகட்டவேண்டும் என்பதே இத்திட்டத்தின் அடிப்படை. கல்வித்துறைவல்லுநர்களால் வகுக்கப்பட்ட திட்டமோ, அதன் அடிப்படையில்ஆராய்ந்துதேர்ந்துஎழுதப்பட்ட நூற்களோ இல்லை, புராணகற்பனைகளின் அடிப்படையில் எழுந்த தீபாவளி, திருக்கார்த்திகை, சூரசம்காரம் போன்ற அறிவுக்கு ஒவ்வாத கற்பனைக் கதைகளை செயல் திட்டங்களாக நிறைவேற்றி இவற்றின் அடிப்படையில் ஆசிரியரே பாட திட்டங்களை வகுத்து, எழுதி முடித்து மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டுமாம். இயற்கைப படைப்புகளோடு விஞ்ஞானம் போட்டியிடுகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டில் அறிவுக்குப் பொருந்தாத கதைகளை அடிப்படையாகக் கொண்டு பாடம் புகட்டுவதென்றால் கேட்பவர் நகைப்பர்! மூடக் கதைகள் மலிந்த இந்து மதத்துக்கு விளம்பரம் தருவதற்கு இது ஒரு வாய்ப்பாகவும் அமையும் எம்மதத்திலும் சாராத அரசாங்கம் என்று கூறிக் கொள்ளும் காங்கிரசு அரசு ஆதாரக் கல்வி திட்டத்தின் மூலம் இந்து மதத்துக்கு ஆதரவுதரும் அரசாக அமையாதா? இந்தியத் துணைக்கண்டம் பிற நாடுகளை விட அறிவுத் துறையில் பின் தங்கியிருப்பதற்கு அடிப்படைக் காரணம் இங்கு வாழும் மக்களுக்கு 'விஞ்ஞான மனப்பான்மை' இல்லாததேயாகும். விஞ்ஞானம் தந்த விதவிதமான பொருட்களின் பயனை அனுபவிக்கக் கற்றார்களே தவிர அதற்குத் தேவையான விஞ்ஞானப் பண்பு இந்நாட்டோரிடம் இல்லை. அந்த அளவுக்கு பழமை எண்ணங்களும், மூடக் கொள்கைகளும், புராணக் கற்பனைகளும் மக்கள் மத்தியில் மலிந்து காணப் படுகின்றன. மேலும் புராணக் கதைகளை இளஞ்சிறார்களுக்கு பாட திட்டமாக்கி அவர்களை பயிற்றுவிப்பது சமுதாய வளர்ச்சியைத் தடுப்பதோடு மட்டு மல்ல பின்னோக்கி விரட்டுவது மாகும் எனவேதான் ஆமை வேகத்தில் நகரும் அறிவுக்குப் பொருந்தாத ஆதாரக்கல்வி தேவையற்றது, தீது பயப்பது என்கிறோம்.

ஆதாரக்கல்வியில் இனி போதனைக்கே சிறப்பான ... தரப் படுகிறது. இணைப்பு ... வர்களின சிந்தனைக் கின் ... காரணமாகத் தானாகவே ... வேண்டுமெனவும் திணி ... படக்கூடாது என்றும் க ... படுகிறது. தீபாவளித் ... நாள் திருக்கார்த்திகை ... என்ற புராணப் புளுகு ... மாணவர்களின் சிந்தனை ... இயக்கி அறிவைத் தூ ... கேள்விகளைக் கேட்கச்செ ... அக்கேள்விகள்மூலம் ஆசி ... விஞ்ஞான போதனை புரிய ... யுமா? "எண்ணமே உல ... என்கிறார் டாக்டர் மு. ... ராசனார். உயர் எண்ண ... மலரும் சோலையாகத் ... வேண்டிய இள உள்ள ... புராணக் களரிக்காடாக ... றுகிறது இத்திட்டம். என ... தான பொதுமக்கள் இத் ... டத்தைவிரும்பவில்லை,வெ ... தொதுக்கிப் புறக்கணிக்கி ... னர்.

மூக்குச் சிந்துதல், மலம் ... ரித்தல், பல்பொடி தயாரித் ... இவையெல்லாம ஆரம்பக ... வியில் செயல் திட்டங்கள ... கொள்ளப்படுகின்றன. ... நூற்றலும்இத்திட்டத்தில் ... கட்டாயப் பாடமாகும். இ ... தொழில்களை அடிப்படைய ... கொண்டு உடம்பினுள் ஓ ... இரத்தசுழற்சி பற்றியும், ... கம்(Oxcygen) தயாரிப்பதுப ... யும் பயிற்றுவிக்க எப்படி ... யும்? விஞ்ஞானப் புதுமை ... பற்றிய கேள்விகளை தானாக ... மாணவர்களின் இதயங்கள ... எழுப்பும திறமைதான் இ ... களுக்கு உண்டோ? முகத்த ... நிறுத்தல், நீட்டல் அளவை ... களையும், நாணய மதிப்பு, ... சரி சதமானம் போன்ற கண ... குப் பாடங்களையும் நூற் ... அடிப்படையில் மாணவர்க ... குப் பயிற்றுவிக்க வாய்ப்பு ... மிகக் குறைவு. சிரந்தரம ... அறிவைக் கொடுக்காத இ ... திட்டத்தை மாணவர்கள் ப ... பாகவே கருதவில்லை. ஆ ... ரக் கல்வியில் ஏறக்குறை ... இரண்டு மணி நேரத்தை நூ ... நூற்பதற்காக செலவு செ ... வேண்டியிருக்கிறது. தொழி ... மூலம் கல்வி என்று இதற்கு ... காரணம் கூறுகின்றார்க ... செயல் திட்டத்தின்மூலம் ... விப்பயனோடு சம்பாதிய ... எதிர்பார்க்கப்படுவதாக ... சொல்லப்படுகிறது. அதனு ... முதல் ஐந்து வகுப்புகளி ... ஒரு மாணவன் முறையே ... அணு முதல் ஒரு ரூபாய்வ ... சம்பாதித்துத் தரவேண் ... மென்றும் கூறுகின்றன ... ஆனால் இதுவரை காடெ ... லும் இயங்கிவருகின்ற ஆ ... ரப் பள்ளிகள்மூலம் ஆதா ... கிடைத்துள்ளதாக அரசாங் ... புள்ளி விவரம் தரமுடியு ... என்று கேட்கிறோம். படிப் ... இல்லை பயனும் இல்லையே

(8-ம் பக்கம் பார்க்க)

(சிறுகதை)

# நன்றி!

(நெல்லை அருணன்)

வாழ்க்கையின் உயர் லையை அடைந்து, பிறரால் ற்றுதலும் பாராட்டுதலும் ன்று, புகழின் நிலைக்களமா க்கின்ற அவன், தன் உயர்வு க்குக் காரணமாக இருந் ர்கட்கு நன்றி செலுத்த ண்டுமென்று கருதினான். வர்களைச் சென்று சந்திக்க யன்றான். ஆனால், யார் ருக்கு நன்றியைக் கூறுவது ன்று வகைப் படுத்திக் ள்ள முற்பட்டான். எது புலனாகவில்லை. ஏனெனில் வனுடைய உயர் நிலைக்கு வருமே உறுதுணையாயிருந்த ல்லை. "தன்னூர்ணவும் முயற் யுமே அவன் மேம்பாட்டுக்குக் ரணமாயிருந்தது" என்ற முடி க்கும் வர இயலவில்லை அவ ல். முயற்சியும் தன்னுணர் மே உயர்வுபடுத்தியது என் ல் தன்னைப்போலுள்ளவர்க யுர்-முயற்சி திருவினையாக் ் என்பதிலே அகலாத அய த பற்றுடையவர்களையும் ர் வாக்கியிருக்கவேண்டு ல்லவா? அவ்விதம் இல் லையே! ஆதலினாலே தான் ளிருக்கின்ற அந்த அளவுக் க் தன்னை உயர்த்தியவரை ணணினான். அந்த நிலைக்குத் த்தானே ஆளாக்கிக் காண்டிருக்க வில்லையேயா ல், எவரும் எவ்வாறு உதவி ருப்பாரென்று எண்ணிய போது மேலும் அவன் சிந்தனை செல்வதாயிற்று.

படிப்படியாகத் தொடக்ககா த்தை அண்மிச் சென்றது அவன் சிந்தை! தற்போதிருக் ன்ற உயர்ந்த நிலையிலிருந்து ன்னர்க்கடந்து வந்த பாதை ின நெடுந்தொலைவு செல்லு ின்றபோது அவனுக்கேவியப் பாக இருந்தது. ஆங்காங்கே தென்பட்டவர்களும் - திருப்பு னை அமைத்துத் தந்தவர்க ளும் யார் என்று சிந்தித்தான்!

அவன் ஒரு காலத்தில்: வீதிகளிலே சுற்றித் திரிந் தான். வீடு வாசலில்லாத காலல்ல, வீண் வம்பும் ண்டை சச்சரவுகளும் அவன் த்திய நிகழ்ச்சி நிரலாக இருந் தது. அடாத செயல்களின் தொடக்க நிலையமாயிருந்தான் அவன். இன்று மீண்டும் அந்த இடத்திற்கு அவன் வந்த போது வருக வருக என்று வரவேற்பு வழங்குவோரும்- மகிழ்ச்சியும் பாராட்டும் தெரி விப்போருமாகத் திரண்டு நின் றனர். அவர்களைக் கண்ட டனே அவர்களுக்குப் பதில் வணக்கமும் நன்றியும் கூறி விட்டு, அவர்கள் முகத்தை ற்று நோக்கிய போதுதான், முன்னாள் நிகழ்ச்சிகள் நிழலாட ாயிற்று.

ஏசிப்பேசினோரும், ஏளனம் செய்தோரும, "எப்படியும் அவனிந்த ஊரை விட்டுத் தொலைந்தால் போதும்" என் தற்காகப் பெரு முயற்சி செய் தோரும் இன்று ஏதுமறியாத ர் போலும்-அவன் புகழ் கண்டு பூரிப்புக் கொள்வோர் போலும்நின்றிருந்தனர். ?வர் களையும் - அவர்கள் செயல் முறைகளையும் கண்டபோது இன்று அவர்கள் சிரிக்கின்ற தோற்றம் தெரியவில்லை; அன்றவர்கள் சினந்து கூறி, எரிக்கும் செந்தீயாய் காட்சிய ளித்தது தெற்றனத் தோற்ற மளித்தது. வாழ்த்துரை வழங் குவோர் கரம்-அவனை வீழ்த் துதற்கு ஆயுதங்கள் எடுத்து வழங்கியதை மறக்க முடிய வில்லை அவனால், மாலை சூட்டு கின்றவர்கள்-ஒருநாள் அவன் தனியே அகப்பட்டுக் கொண்ட போது பலரின் கூட்டுறவால் மரத்தில் பிணைத்துக் கட்டுதற் குக் கயிறு போட்ட காட்சி தான் நினைவுக்கு வந்தது. காரிலே ஏறுங்கள் என்று வழி காட்டி முன் நிற்போரெல்லாம்- இழுத்துச் செல்லுங்களென்று திசை காட்டி எதிர் நின்று ஆணையிட்ட காட்சி தென்பட் டது, கட்டித் தழுவி மகிழ்வோ ரின் முன்னே - ஒருவன் கையைப் பின் புற மிருந்து பிணைத்து நிற்க முன் நின்றுக னன்றுரைத்த காட்சிகள் கனவு போல் தோன்றியது.

இவற்றை யெல்லாம் நினைத் துக்கொண்ட அவனுக்கு அவர்கள் மீது கோபமோ-பழி வாங்க வேண்டுமென்ற பதை பதைப்போ, வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் இது தானென்ற கருத்தோ ஏற்பட வில்லை. மாருக அவர்களைப் பார்த்தால் அவனுக்கு நகைப் புத்தான் ஏற்பட்டது. தங்கள் செயலை, இந்தச் சிறு நடிப்பு (வாழ்த்துவதும்-பாராட்டுவது மான செயல்கள்) மறைத்து விடுமென்றுகொண்டிருக்கின்ற அவர்கள் நம்பிக்கை அவனைச் சிரிக்கச் செய்தது. சிரித்தான். அவர்கள்வரவேற்பிலே அவன் மகிழ்கிருனென்றே கருதினார் கள். அவன் சிரிப்பின் பொரு ளறிய முற்படவில்லை. அவ னும் அவர்கள் தன் சிரிப்பின் தன்மையை-உணர வேண்டு மென்று கருதவில்லை. உணரு வார்கள் என்று எதிர்பார்க்க வும் இல்லை, அவனுக்கு அந்த நம்பிக்கையும் கிடையாது. ஏனெனில், அவர்கள் திருந்து வதாக இருந்திருந்தால்-அவர் போன்ருர் திருந்தினல் நாடே திருந்தியதாகிவிடும். காரணம் அவர்கள் எல்லாம் வல்லவர் களாகவும்-எதையும் செய்யும் ஆற்றலும் வாய்ப்பும், வசதி யும் உடையவர்களாகவும் இருக்கிருர்கள். அவர்களை எதிர்த்து நிற்கும் வலிவும்- திறனும் யார்க்கும் எதற்கும் இல்லையென்றுகூடக் கூறலாம். அத்தன்மையை உடைய அவர்கள் திருந்தினல்? ஆனல் திருந்த மாட்டார்கள். அது மட்டு மல்ல திருத்த மென்று அவர்கள் கருதுவதும் தெளிந்த நேர்மை யென்று முடிவு செய்யப்பட்டிருப்பவை களும், விடாது கைக்கொண்டு செயலாற்றி வருவதுமாக இருப்பதெல்லாம் பிறர்படும் துன்பம் எண்ணுமையேயாகும். அதற்கு அவர்களுக்குத்துணை யாவது பணபலமேயாகும்! அதனையவர்கள் காத்து வளர்த்து வரவே பெரிதும் முயல்கிருர்கள். அதை நீத்து அவர்கள்வெளியேறிவருவார்க ளென எவ்வாறு எதிர்பார்க்க இயலும். அதே காரணத்தால் அவர்கள் தரும் பெருமைக்குத் தக்க முறையில் அவரவர்கள் காட்டிய முறையின் படி-அதே தன்மையில் அவர்களுக்கு மாற்றம் தந்தான். அந்தவேளை யில் அவன் நினைவெல்லாம் முன்னர்த்தான் இருந்த இடத் தையும் சென்ற இடத்தையும், சேர்க்கப்பட்ட பகுதிகளையும் துளாவிக் கொண்டிருந்தது. அங்கே செல்ல விழைந்தான்.

நடுத்தரமான வீடு. அந்த வீட்டு வாசலில் வளத்தின் எடுத்துக் காட்டாகவும்-வனப் பாகவும் நின்று கொண்டிருந் தார் ஒரு மனிதர் அவர் எதிரே ஒருவன் தலை கவிழ்ந்த வண் ணம் நின்றுகொண்டிருந்தான்.

"நன்ருகச் சிந்தித்துப் பாரடா! உனக்குச் சிந்திக்கும் திறமை ஏது? சிந்தித்திருந் தால் இந்தச் சிறுமதி வந்தி ருக்குமா உனக்கு ஏழைத்தாய்- ஏதுங்கதியற்ற வயோதிகப் பாட்டி, இவர்களைக் காப்பாற்ற வேண்டு மென்ற எண்ணம் சிறிது மில்லாமல் கண்டபடி சுற்றுவதும், கண்டவர்கள் வெறுத்து ஒதுக்கு மளவுக்குக் கொடுமைகள் செய்வது மாகத் திரிகிருய். ஊர்சுற்றி வருகிருய் நீ! உன் கவலையாலேயே உயிர் வைத்திருக்கிருர்கள். இவர்கள் உன்னைப் பொன் கேட்கிருர் களா? அடக்க ஒடுக்கமாக— குடும்பத்தின் பெயரைக் காப் பவனக இருக்க முடிய வில் லையே உன்னால்! காக்கத்தான் முடிய வில்லை யென்ருலும் கெடுக்காமலாவது இருக்கக் கூடாதா"

இவ்வாறு அந்த மனிதர் கேட்டபோது "நீர் யார் என் னைக் கேட்க" என்று கேட்டு விடலாமா என எண்ணினன். ஆனல் அவ்விதம் கேட்க வில்லை. ஏனெனில் அவனைப் பரிவுடன் அழைத்து—அன்பா கப் பேசி—நலத்திலே அக்க ரைக் காட்டி இனிமையுடன் பேசினோர் எவருமே கிடை யாது. அவனை அணுகுவோ ரும் பயன்படுத்த முனைவோ ரும் அவனுல் தங்களுக்கு ஏதே னும் காரியமாக வேண்டியிருந் தால் மட்டுமே காண விரும்பு வர், ஏனைய வேளைகளில் அவன் தங்களைக் காண்பதே கேடெனக் கருதுவர். ஆனல் இவரோ எந்த விதக் காரணமு மில்லாமல்—எதையும் எதிர் பாராமல் அவனை அழைத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

"இதுவரை உன்னை அழைத் தவர்களும் உபசரித்தவர்களும் உன்னுல் பயன் பெற்றவர்கள் பயன் பெற விரும்புபவர்கள். அவர்கள் உள்ளெண்ணங்க ளுக்கு நீ கருவியாகப் பயன் பட்டாய், பயன் படுத்தப் பட் டாய். ஆனல் அவர்களே உன் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் கரு வியாக மாறுவார்கள் என்ப தை மறந்து விட்டாய். நான் உன்னைக் கூப்பிட்டு இவைக ளைக் கூறுகின்றபோது என்னை நீ எதிர்க்க நினைக்கலாம். அதை நான் அறிவேன். அத் துடன் உன் எதிர்ப்பு என்னி டம் நிலைக்காது என்பதையும் நானறிவேன்"

இவ்வாறு அவர் கூறிய போது தன் எண்ணத்தை எவ் வாருே அவர் புரிந்து கொண் டாரே என்பதால் சிறிது நாணம் அவனுக்கு ஏற்பட்ட போதிலும் "உன்னுடைய எதிர்ப்பு" நிலைகாது என அவர் கூறியதைக் கேட்டதும் நிலைக்கிறதா இல்லையா என்று பார்த்து விடுவோம் என்கின்ற ஆத்திரம் வந்தது. என்ருலும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் குணமும் கூறிய முறையும்-அவற்றுள்ளே மறைந்து கிடந்த உண்மைக ளும் ஆத்திரத்தை அகற்றின. கோபம் கொந்தளிக்கின்ற அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"அழாதே! அழுவானேன். நீயே திருத்தி நடக்க வேண் டும்; குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும், தாயைப்பேண வேண்டுமென்ற எண்ணம் வேண்டும். அதற்கு நீதானே முயற்சி செய்ய வேண்டும்?"

என்ருர்! "என் முயற்சிகளி லே பயனில்லை! நான் கெட் டழிவதைத்தவிர வேறு வகை யில்லை! என் கொடுமைக்கு அஞ்சி அஞ்சலியிடுவார் இங் குண்டு. ஆனல் நான் சென்று கெஞ்சிக் கும்பிட்டுக் கேட்டா லும் 'வேலையில்லை—உனக்கா வேலை-நீ வேலை பார்க்கிறே னென்ருல் யார் நம்புவது' என்று கேலி பேசுபவர்களே அவர்கள். இவர்கள் நடுவே நானெப்படி உழைத்து வாழ முடியும். என் வாழ்வைத்தான் எப்படி வகுத்துக்கொள்ள முடி யும்" என்று நேரிடையாகக் கேட்காமல் சுற்றி வளைத்து. "இந்த நிலையில் நான் மாறவில் லையானல் எப்படி வாழமுடி யும்" என்று கேட்டான். அதற்கவர் உனக்கு வாழ்வு தானே வேண்டும் நான் தரு

றேன் என்று கூறி முதலில் அவன் கோலத்தை மாற்ற முற்பட்டார். பெருந்தொடையை மறைத்துக் கொண்டிருக்கின்ற அளவு கால்சட்டை தோள் மறைப்பில்லாத பனியன், படித்து நீவி விடப்படாத முடி, மெல்லிய மீசை, இவைகளுடன் நல்ல கட்டமைந்த உடலும் வலுவுமுடைய அவனை வேட்டியாலும்--முழுக்கைச் சட்டையாலும் தோற்றத்தை மாற்றினார். முடி ஒழுங்குறத் திருத்தம் செய்யப்பட்டது. அவருடனேயே அழைத்துச் செல்வதும் திரும்பி அழைத்து வருவதுமாக இருந்தார். ஊரெல்லாம் இருவர் சார்பிலும் பல்வேறு விதமான பேச்சுக்கள் நடைபெற்றன.

எவராலும் எதனாலும் கட்டுப் படுத்த முடியாத ஒருவனை இவர் கைப்பிடியில் வைத்திருக்கிறாரே! இவர் அவனைவிட ஆற்றல் மிகுந்தவராக இருப்பார் போலிருக்கிறது. இவனையே அடக்கி ஒடுக்கித் தன் வசமாக்கிய இவர் யாரைத் தான் அடக்கமாட்டார்!"

"இவனைக் காவலாளியாக வைத்துக் கொண்டிருப்பவரிடம் நாம் நெருங்குவது தவறு"

"எத்தனை நாளைக்குக் கட்டுப்பட்டிருக்கப் போகிறான். என்றாவது ஒரு நாள் அவருக்கே எதிரியாகி விடுவான். இதுவும் அவன் முறைகளிலே புது அங்கமாக இருக்கும்"

"ஏதோசிக்கிக் கொண்டான். அதனால்தான் பணிவோடு நடப்பதாகப் பாசாங்கு செய்கிறான். நடிக்கிறான். என்றைக்காவது அவரையே வேட்டு வைத்துத் தீர்ப்பான்"

என இவ்வாறு பல வகையாகப் பேசிக் கொண்டனர். இன்னும் சிலர் அவரிடம் நேரடியாகவே கேட்டனர். "உங்களுடன் ஒருவன் வருகிறானே! அவனை நன்றாகத் தெரியுமா? அவனை உடன் வைத்துக் கொண்டிருக்காதீர்கள். அவன் புத்தி என்றும் திருந்தாது-திரும்பாது. அவனை உடன் அழைத்து வருவதால் உங்களுக்கே ஆபத்தாவதுடன் அடுத்தவர்கள் ஒரு மாதிரியாக எண்ணுவார்கள்."

எவ்வளவோ முறையிலெல்லாம் கூறினார்கள். அது ஓரளவு உண்மையுங்கூட. ஏனெனில் அவனை வயப்படுத்துவது கடினம். அவ்வாறு அவன் செல்வது "புலியொன்று கூட்டினின்று உடன் செல்வது" போலத்தான். ஆனால் அவரோ எதையும் பொருட்படுத்தாமலும், அவனை நல்வழிப் படுத்துவதிலேயே நாட்டமும் உடையவராக இருந்தார். முதலில் அவரும் ஊரவர் சொல்வது உண்மையாக இருக்குமோ' என்று எண்ணினாலும் நாளடைவில் அவன் மனோநிலையை அறிந்து கொண்டார். அதன் பயனால் நேர்ந்த விளைவுதான். வாழ்க்கைப் பெருஞ்சாலையில் முன்னேற்ற புரிக்குச் செல்கின்ற புதிய பாதை வகுக்கப்பட்டது. அதில் கால் தூக்கி வைத்து நடக்க ஆரம்பித்தான். அந்த எண்ணங்கள், நிகழ்ச்சிகள், நிலைமைகள் இன்னும் அவன் மனக்கண்ணை விட்டு அகலவில்லை! இப்போது அவரைக் காணவே ஓடோடிச் சென்ற இடத்தில் அவனது அன்றையச் சிறப்பு நிலை கருதி வரவேற்பும் பெருமதிப்பும் வழங்கப்பட்டது. எனினும் முன்னைய நிலையிலும் இன்றைய நிலையிலும் இந்த வரவேற்பு வகையினரை ஒப்பிட்டுப் பார்த்தான். அவர்கள் ஒரு பொருட்டாகத் தென்படவில்லை! ஓடோடிச் சென்றான்! சிறிய கூடத்தில், சாய்வு நாற்காலியில் அமைதியும் சிந்தனையும் தோன்ற அவர் வீற்றிருந்தார்.

"வணக்கம்"

"வணக்கம்! யார்? தெரியவில்லையே. இப்படி உட்காரு! நீ யார்? என்ன செய்தி?

"என்னைத் தெரியவில்லை?"

"தெரிந்திருக்கும்! தெரியாதவர் வீட்டுக்கா வருவாய்? அல்லது தெரியாத ஒருவரை நீ நாடிச் சென்றிருந்தாலும் இவர் நமக்குத் தெரியாதவர் தவறான முடிவுடன் வந்து விட்டோமென்று தெரிந்து கொள்ளாமலிருக்க முடியுமா? அல்லாமலும் வீட்டைக் கண்டு வந்திருக்க வேண்டும். எனவே சரியாகத் தெரிந்துகொண்டுதான் வந்திருப்பாய். அதனால் நான்தான் மறந்திருக்கிறேன். அதை ஒப்புக் கொள்கிறேன். நீ யாரென்று முதலில் சொல்"

"சோணாசலம்"

"அடடே! சோணாசலமா? வாடா வா!" என்ற அவர் உரிமை வரவேற்பு வெளிப்பட்டது. கண்டுகொள்ளவே முடியவில்லையடா? எவ்வளவு மாற்றம் பெற்றிருக்கிறாய்?" 'மாணிக்கம்! மாணிக்கம்!! அது அவரது மனைவியாரின் பெயர்! தெரிகிறதா இவனை! சோணாசலம். நெய்வேலியில் நாமிருந்தபோது இருந்தானே. அவன்!"

'வணக்கம்! சின்னம்மா!' என்றான் நன்றி தவழ! அவரைத் தந்தையாகவும், அந்த அம்மையாரைச் சின்னம்மாவாகவுமே கருதி வந்தான்.

"வாடா தம்பி! நலமாக இருக்கிறாயா? இப்போது போக்கிரித்தனத்தையெல்லாம் விட்டு விட்டாயா?"

"என்னடி இது! 'ஆளே மாறியிருக்கிறான் இன்னுமா அப்படி இருப்பான்"

"உண்மைதான் சின்னம்மா! சித்தப்பா அவர்கள் காட்டிய வழியில் என் புது வாழ்வு இருப்பதைக் கண்டு சென்றடைந்தேன். அமைதியாக வாழுகிறேன்"

இவ்விதம் அவன் 'சித்தப்பா—சின்னம்மா' என்று அழைக்கின்ற போது அவர்கள் இருவரும் தங்கள் மகன் அழைப்பைப் பெறுவது போலவே கருதினார்கள். அவர்களிருந்தும் உயர்நிலையில் அவன் அவ்வீட்டு வாசலைக் கூடச் சென்று மிதிக்க முடியாத நிலை! இருந்தும் இன்னும் பழைய நிலையிலிருந்து நழுவா வண்ணம் அன்பு பாராட்டுகின்ற தன்மையை எண்ணி எண்ணிப் பூரித்தான்!

"மாற்றம் உருவில் மட்டுமல்ல வாழ்க்கைத் தரத்திலும் பெற்றிருக்கிறேன். தூற்றியோர்களால் போற்றப்படுகிறேன். வெறுத்தவர்கள் பாராட்டக் காண்கிறேன். ஏசிப் பேசியவர்கள் எதிர் கொண்டழைக்க வருவதை அறிகிறேன். அவை அனைத்தும் தாங்கள் காட்டிச் சென்ற திருப்புமுனையென்பதையும் உணர்கிறேன். எனவேதான் தங்களை—என் வாழ்க்கை உதயத்தின் கதிரவனை-வரண்ட நிலத்தை வளமாக்கிய கருணை உழவனை-எதற்கும் பயனற்றவனாகக் கிடந்த என்னை எல்லா வகைக்கும் பயன் படும்படி செய்த ஆக்கப்பணியின் தலைமைப் பூண்டவராகிய தங்களைக்காண வந்தேன். நல்லவர் போற்ற நட்பினர் பரவ-நாட்டவர் பாராட்ட நானும் ஆட்பட்டேனென்பதைக் காணுகின்றபோது அத்தனைக்கும் நாயகமாகிய தங்களை நானெப்படி மறக்க முடியும். அன்று தாங்கள் மட்டும் என்மாட்டுத் தயவு உள்ளமும்-தன்மை எண்ணமும் கொள்ளா திருந்திருந்தால் இன்றுவரை கொடியவனாக குற்றவாளியாக எங்கோ கைதியாக இருந்திருக்க வேண்டியவன்தானே நான். ஆனால் எவ்வித குறையுமின்றி இருக்கிறேனென்றால் தாங்கள் அதன் மூலப்பொருளென்பதை நான் எவ்விதம் மறக்க முடியும்.

"நாங்கள் அவ்வூரை விட்டு வந்து விட்டபின் நீ என்ன செய்தாய்-எவ்வழியில் முன்னேறினாய்?"

"தாங்கள் வந்து விட்ட பின்னர், அந்த ஊர் என்னை மீண்டும் பழைய வழிக்கே செல்லத் தூண்டியது- 'வா' என்றழைத்தது. எனினும் மீண்டும் அந்த நிலைபெற விரும்பாது நான் ஊரைவிட்டு வெளியேறினேன். எனினும் முன்னர் நடிப்புத்துறையில் எனக்கிருந்த பேராவல் தீரவில்லை. அதன் காரணத்தால் ஊர்கள் பலவற்றையும் சுற்றி நடிப்புத் துறையில் முன்னேறப் பாடுபட்டேன். அதன் மூலம் நான் பெற்றது ஏமாற்றமும்-தொல்லையும்தானே தவிர வேறில்லை. என்றாலும் என் ஆவல் மட்டும் தீரவில்லை. இறுதியில் சென்னை சென்றடைந்து பல வழிகளிலும் முயற்சித்தேன். பலனில்லை. ஆனால் இதன் பயனாக நான் பெற்ற பாடங்கள் எனக்குப் போதியவையாக இருந்தன. ஒன்று மட்டும் மறக்க முடியாதது. இழிந்து அழிந்து போக இருந்த என்னை வலிந்து பற்றி நல்வழிக்குத் திருப்பிய தங்களைப் போலவே காலம் பலரை எனக்குத் தந்தது. பணிவும்-உழைப்பும் அறியாது முரட்டுத் தனமும்-அஞ்சா நெஞ்சமும் கொண்டிருந்த நான் இரண்டாண்டுகள் ஒரு நண்பரின் உதவியால் பணிவு-பண்

## தென்னகத்து முல்லை!

தென்னகத்துச் சோலையிலே பூத்த முல்லை—தமிழ்
திசையெங்கும் மணம்பரப்பும் அன்பின் எல்லை
பொன்னகத்துப் பூவையர்கள் போற்றுங் கிள்ளை—தமிழ்
புன்னகையால் மகிழ்விக்கும் புதுமைப் பிள்ளை.

மண்ணகத்து மறவேந்தர் வளர்த்த நங்கை...தமிழ்
மாற்றாரைத் தன்வலியால் மாய்க்கும் வேங்கை
கண்ணெதிரே நின்றாடிக் களிப்பூட்டும் மயில்—தமிழ்
கருதாத வீணர்களைக் கூறுக்கும் அயில்.

கவிவாணர் உள்ளமதிற் களிநடஞ்செய் கன்னி—தமிழ்
காசினியோர் வாழ்வளிக்க கடுகிவரும் பொன்னி
புவியோங்கும் பொதியத்தில் ஒளிதருவெண் மதி—தமிழ்
புகழ்பாடி உறவாடும் புலவோரின் நிதி.

உயர்மாட மிகுகூடற் பதிமேவுந் தேன்—தமிழ்
ஒளிநீல வானத்து விளையாடும் மீன்
ஒலிமேவும் தமிழ்ச்சோலை தனில்துள்ளும் மான்—தமிழ்
உலகோரை உய்விக்கும் ஒப்பற்ற வான்.

வித்துவான், இல. அரவரசன்.

பாடு-நடை முறைகள் ஆகிய வைகளைப் படித்தேன். பக்கள தம்வாழ்க்கையில் சந்திக்கின்ற நல்ல தீயன அனைத்தும் உணர்ந்து ஏற்க நேர்ந்த அந்நாட்களை நான் மறக்கவே முடியாது. தங்களுக்கடுத்த படியாக என் நன்றிக்கு உரித்தானவர் அவர்தான். இரண்டாண்டுகள் அவரின் கூட்டுறவு எனக்கொரு பயிற்சிப் பள்ளியாக இருந்தது என்று கூறுவதாயினும் அது மிகையாகாது. இரண்டாண்டுகளுக்குப்பின் சென்னை சென்றடைந்தேன், எத்தனைதான் இன்னலும் தொல்லையும் ஏற்ற போதும், நடிப்புத்துறையிலே யுள்ள என் ஆர்வம் மட்டும் குறையவில்லை! அதனால் துன்புற்ற நாள் இல்லை. ஒரு சமயம் என் நிலையறிந்த ஒருவர் என்னை ஆதரிக்க முன் வந்தார். அவரும் தங்கள் குடும்பத்தவர் என்பதையறிந்தபோது என் உள்ளம் இந்தக் குடும்பத்திற்கு எவ்வாறு நன்றி செலுத்துவதென்றே எண்ணிக் கொண்டிருக்கிறது. தங்களால் ஆதரிக்கப்பட்டு ஒரு பாதையில் செல்ல விடப்பட்ட நான் அதன்படியே சென்று மற்றொரு நண்பரிடம் உலக அனுபவங்கள் அனைத்தையும் தேவையான அளவு பெற்றேன். அங்கே பொய்யர்கள் ஒருவரின் சொல் முறை திருப்பு முனையாயிற்று. அங்கிருந்து நீங்கிச் சென்று ஒரு பணிமனையையடுத்தேன். அங்கே இரக்கமும்-ஈகைப்பண்பும் கொண்டிருப்பது தவறு என்பது உணர்த்தப் பட்டது! வெளியேற்றப்பட்டேன் அது ஒரு திருப்பு முனை. அதன் பின் என்னைக் காப்பாற்றியவர் தான் தங்கள் அண்ணன் மகனார்! அவரது ஆதரவை உடனிருந்து பெற்று, உரிய வழிக்குச் செல்லவிடப் பட்டேன். அங்கே நான் கற்ற பாடங்கள் பல. இறுதியில் ஒரு தனிப்பட்டவரின் உள்ளப் போக்கு என்னை வெளியேற்றிற்று. பின் ஒன்று கேட்க-பக்க பொன்னூ பூங்கா-பின் ஒன்று நிகழ இருப்பது உலகின் ஒரு பகுதி என்பதை உணர்த்தப் பெற்றேன். ஓடோடிச் சென்றேன். தலைப்புறத்தவிக்கும் எனக்குத் திரையுலகம் வெற்றிக்கு வழிகாட்டி நின்றது. சென்றேன்-பெரும் புகழும் அடைந்தேன்! அப்போதுதான் உங்களுக்கு நன்றி சொல்ல எண்ணமும்-இதுகாறும் நான் குறிப்பிட்டவர்கள் ஒவ்வொருவரும் 'என் வெற்றிக்குக் காரணர்கள்' என்பதால் அவர்களுக்கு நன்றி சொல்லவும் வந்தேன்'

அரைகுறையாக விடப்பட்டிருந்த கதையை ஒரு சிலர் படித்துக் கொண்டிருந்தார்கள். யார் தன்னை மீண்டும் நெடுநாள் ஆதரித்ததாக அவன் குறிப்பிட்டிருந்தானோ அவர்களாலேயே அவன் மறக்கப்பட்டு விட்டான். இனிதான் உயிர் வாழ்தலினும் சாதலே சிறப்பென எண்ணிச் சென்று உயிர் நீத்தான் என்கின்ற செய்தியைப் பின்னர் கண்டபோதுதான் ஒரு தனி மனிதனின் நன்றிக்கு உரித்தானவர்களின் வகையும், அவர்கள் தன்மைகளும் வெளியாயின. அவன் குறைக்கதையின் முடிவில் "இதைப் படிப்போர் எல்லோருக்குமே என் நன்றியென எழுதியிருந்தான். அதன் மூலம் தன் கதையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் அதனைக் காணுவார்கள் என்பதை அவன் கருதியிருந்தான் என்பது தெளிவாகிறதல்லவா! அதனால்தான் அவன் எல்லோருக்கும் கூறியிருக்கிறான் நன்றி. ●

பொருத்த அளவில் குறைந்த நிலையிலிருந்து அளவாவது அறிவும் பயிற்சியும் இருக்கவேண்டும் என்ற கவலை எல்லோரிடமும் இல்லை. இதன் காரணத்தால் கல்வித் தரம் குறைகிறது. பல்கலைக் கழகங்களும், பயிற்சிப் பள்ளிகளும் இதன் தகுதியை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. ஏழாவது வயதிலிருந்தே மாணவன் பாடசாலையிலே சேர்க்கப்படுகிறான். கடைகளில் எடுபிடி வேலைக்கோ, கணக்கு எழுதுவதற்கோ கூட ஆதாரப்பள்ளி மாணவனை எடுப்பதற்கு தயங்குகின்றனர். தரங்கெட்ட இக்கல்வித் திட்டம் தகாதது என்று நாம் சொல்வதிலே என்ன தவறு?

ஆதாரப் பள்ளிக்கூடங்களுக்கு இட வசதியும் மிக அதிகமாக வேண்டும். ஆதாரக்கல்விக்கு விளம்பரம் தருகின்ற பெரியவர்கள் கூட தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கும், கான்வென்டுகளுக்கும் தான் அனுப்புகின்றனர். பாரதத்தின் மாமணி பண்டிதர் நேருவின் பேரக்குழந்தைகளைக் கூட நேரு பெருமான் இந்திய எல்லை கடந்து மேனாடுகளிலே தான் படிக்க வைக்கின்றார் என்பதை மறந்து விடக்கூடாது. காரணம் ஆதாரப் பள்ளியில் இவர்களுக்கெல்லாம் நம்பிக்கை யில்லாததேயாகும் ஆரம்பக்கல்வியில் ஆதாரக் கல்வியின் குடிமைப்பயிற்சித் திட்டங்களை சில மாற்றங்களோடு புகுத்தினால் ஓரளவுக்கு நன்மைகள் ஏற்படலாம்!

ஆதாரக்கல்வியைப் பற்றி சென்ற செப்டம்பர் திங்கள் புகழ்சான்ற கல்வி நிபுணர் ஒருவர் "ஆதாரப் பள்ளிகளுக்கு வரும் பார்வையாளருக்குக் காட்டப்படும் நடப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டு, ஆதாரக் கல்வி முறையைப் பற்றி கற்பிக்கப் பட்ட கருத்தை உண்மை என்றே கருத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இந்த ஆதாரக்கல்வி பாடசாலையில் பயின்ற மாணவர்கள், சாதாரண பள்ளிகளில் படித்த மாணவர்களைவிட பின் தங்கியிருப்பதுடன் மட்டுமல்லாது, தங்களுக்குக் கற்பிக்கப் பட்டதாகக் கூறப்படும் கைத்தொழில்களிலும் திறமையும், தேர்ச்சியும் அற்றவர்களாக உள்ளனர். ஆதாரக் கல்வி ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியோர் 'தொழில் முறைக் கல்வி என்பது, விழாக்களின் போது வருகை தரும் பார்வையாளர்களின் பொருட்டே ஒரு வழக்கமாகவும், ஏமாற்று வித்தையாகவும் அமுல் செய்யப்பட்டுள்ளது' என்று நம்புகின்றனர். நாட்டிலுள்ள பல பட்டிக்காடுகளையும் சுற்றிப் பார்த்தபின்னர், "ஆதாரப் பள்ளிகளில் கைத்தொழில் கற்பிக்கப்படுகிறது என்று கருதுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகும்" என்றுதான் கருத வேண்டியுள்ளது. பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் சிறிய குறிப்புகள் தருவது போல, தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கும் எளிதாகக் கைத்தொழில் திறமை காட்ட முடிகிறது; ஆனால் மாணவர்கள் காலத்தை வீணாக்கிக்கொண்டு, தேர்ச்சியும் திறமையும் இல்லாது இருக்கின்றனர்; படிப்பைப் பற்றியோ இரண்டாவதாகத்தான் அக்கறை கொள்கின்றனர்" என்று கூறுகின்றார்.

மேனாட்டுப் பெரியார் ஒருவர் 'மனிதப் பண்பை வளர்ப்பது தான் கல்வியின் குறிக்கோள்' (The purpose of education is the development of personality) என்று கூறுகின்றார். கல்வி வல்லுநர்களாலும் பேரறிஞர்களாலும் நாகரிகமற்றது, தீது பயப்பது' தேவையற்றது மாணவ சமுதாயத்தைக் கெடுப்பது என்றெல்லாம் குறை கூறப்படுகின்ற இந்த ஆகாத திட்டம் மனிதப் பண்பை வளர்க்காது குறைக்கும். கல்வித் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் போது நன்றாக சிந்தனை செய்து, நல்லறிஞர்களோடு கலந்து, இத்துறையில் வல்லவர்களின் கருத்தையும் அறிந்து செய்ய வேண்டும். திடீர் திடீரென்று மாற்றங்களை ஏற்படுத்துவது நீண்ட காலம் வாழ வேண்டிய ஒரு சமுதாயத்தை அரும்புப் பருவத்திலேயே அழித் தொழிப்பதாகும்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற உலகப் பொது மறைக்கிணங்க கல்வித்துறையில் வல்லுநர்களிடம் இதுபோன்ற திட்டங்களை தந்து அவர்கள் கருத்தைக் கேட்டு செயலாற்றுவதே நல்லது, சிறந்தது, அறிஞர்களின் போற்றுதலுக் குரியது! ●

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் இத்திட்டத்தின் பயன் தான் என்ன? ஏதோ ஒரு சில காங்கிரசுக்காரர்களுக்கு சுதந்திரப் போரில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தைக் காட்டி பதவியும் பவிசும் தருவதற்காக இதுபோன்ற கவைக்குதவாத திட்டங்கள் இன்று நாட்டிலே புகுத்தப்படுகின்றனவே தவிர வேறென்ன?

ஆதாரக்கல்வி பகுதிகளிலுள்ள மேல் அதிகாரிகளை திருப்திப்படுத்த மாணவர்கள் கணக்கில் ஊதியம் காட்ட வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகின்றனர். அதனால் மாணவர்களிடம் பணம் வசூலித்தோ, ஆசிரியர்களும் நிர்வாகிகளும் தங்கள் கைப்பணத்தைப் போட்டோ வெளியே இருந்து நூல் சிட்டம் வாங்கி கணக்குகளை சரிக்கட்டுகின்றனர். உண்மையின் நிலைக்களன்களாக, வாய்மையின் உறைவிடமாக வாழ வேண்டிய ஆசிரியர்களும் மாணவர்களும் இந்த ஆகாத வழிகளிலே நுழைந்து தங்கள் பதவியையும் நிலையையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைமையில் இருக்கின்றனர் "உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய" உத்தமர் காந்தியடிகளின் திட்டம் என்று பெருமைப் படுத்தப்படும் இக்கல்வி முறை ஆசிரியர்களை ஊதாரித்தனமான வழிகளிலே செல்லத் தூண்டுவது காந்தியடிகளின் புகழுக்கே இழுக்கு தேடித்தருவதாகும்.

ஏழாவது வகுப்புவரை இந்த ஆகாத திட்டத்தைக் கட்டி அழுதுகொண்டு எட்டாவது வகுப்பில் நுழையும் மாணவனின் நிலை என்ன என்பது நமது ஆராய்ச்சிக்குரியது. எட்டாவது வகுப்பில் பொதுத் தேர்வு கிடையாது. அந்த வகுப்பில் பயிலும் மாணவனுக்கு போதிய அளவு ஆங்கில அறிவும் இருப்பதில்லை அதோடு எட்டாது வகுப்புக்குச் செல்லும் மாணவனுக்கு விஞ்ஞானம், கணக்கு, மொழிகள், சமூக நூல் இவைகளைப்

# இந்தித் திணிப்பு கலாசார அநீதி!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க மொழியாக ஆக்குவதோ அல்லது இந்தத் தேதியிலிருந்து அரசாங்க மொழியாக இந்தி வருமென்று வரையறுப்பதோ, காலப்போக்கை எதிர்த்து நிற்க முயலுவதாகும்.

தற்பொழுதுள்ளபடி ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கலாம். இதுவரைப் பயனுள்ளதாகவும் ஒன்ருக இருப்பதாகவும் உள்ள ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதில் தவறில்லை. அந்தப் பயனைக் குறைக்கும் விதத்தில் நாம் ஏதுவும் செய்யவேண்டும்.

தேசிய மொழியாக இந்திக்குள்ள குறைகள் ஆங்கிலத்துக்கு இருப்பதாக நாம் யாரும் கூறவில்லை. அரசாங்க நிர்வாகத்திற்கும் மற்றும் முக்கிய அலுவல்களுக்கும் பொதுவாக ஒரு மொழி வேண்டுமென்று கூறும்பொழுது, ஆங்கிலம் இப்பொழுதுள்ளதைப் போல இருக்கலாம் என கூறுகிறேம்.

நமக்குள்ள ஆங்கில மொழிப் பயிற்சி இவர்கள் கூறுகின்ற மாற்றங்களாலோ வேறு எந்த வகையிலோ பாதிக்கப் பட்டால், அது மிகவும் துரதிர்ஷ்டமான சம்பவமாகும். இந்தியாவிற்கு வெளியுலகுடனும், வெளியுலகுக்கு இந்தியாவுடனும் வலுவான தொடர்புகள் இருக்கின்றன. நம்மை நாமே பிரித்துத் தனிமையாக்கிக் கொண்டால், வாணிப, பொருளாதார, கலாசார அரசியல் வசதிகள் குறைந்து, அவல நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இந்தித் திட்டத்தால் தால் இருவிதப் பேராபத்துக்கள் இருக்கின்றன. ஒனறு இந்தியாவிற்குள் இருக்கும் வேறுபாடுகள் கடுமையாகும்- மற்ருென்று உலகத்தில் நமக்குள்ள இடத்தை விட்டுக் கொடுத்தவர்களாவோம்!

## தாய்மொழி ஆங்கிலம் போதுமானவை

—0—

## டாக்டர் சி. பி. யின் பேருரை!

—(0)—

டாக்டர் சர் சி. பி. இராமசாமி அவர்களின் **தலைமை உரை.**

"இந்தியிடம் தனிப்பட்ட முறையில் எனக்கு வெறுப்பு கிடையாது, முதன் முதலில், 40 ஆண்டுகளுக்கு தென்னிந்தியாவில் வைக்கப்பட்ட இந்திப் பிரசார சபையை நான் தான் திறந்து வைத்தேன். மிகச் சமிப காலத்தில் கூட உதக மண்டலத்தில் ஒரு இந்திப் பிரசார சபைக் கட்டடத்திற்கு நான் அடிப்படைக்கல் நாட்டினேன். இந்தியாவில் அதிகமான பேர்கள் பேசுகிற ஒரு மொழியாக இந்தி இருக்கிறபடியால், அந்தப் பகுதிகளுக்குச் செல்ல இந்தி தெரிந்திருப்பது நல்லது என நினைத்தேன்.

இந்தி அமைப்பில் சில அம்சங்கள் உருதுவைப் பின்பற்றி இருக்கின்றன. மொகலாய அரசர்களின் துருப்புகள் வட இந்தியாவில் ஆக்ரா, டெல்லி, கான்பூர், டாக்கா போன்ற இடங்களில் தங்கிய பொழுது அவர்கள் பேசியது உருது மொழியெனப்பட்டது. அதில் அரபி, பாரசீக மொழிச் சொற்களுடன் வடமொழிச் சொற்களும் சேர்ந்திருந்தன. இந்தியும் அவ்வாறு பலமொழிச் சொற்கள் கலந்து உருவாக்கப்பட்ட மொழியாகும்.

அரசியல் சட்டத்தின் 315வது பிரிவின்படி, இந்தி ஒரு வளர்ந்த மொழியல்ல. வளர்கின்ற ஒரு மொழி என்பது ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 'இந்திய கலாசாரத்தை எல்லாம் ஒன்ருகப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியை வளர்க்கவும், பரப்பவும் இந்திய அரசாங்கம் பாடுபடவேண்டும்' என் அந்த அரசியல் சட்டப்பிரிவு கூறுகிறது. திராவிட கலாச்சாரம் வட இந்திய கலாசாரம், அசாமியர்களின் கலாசாரம் பஞ்சாபியர்களின் கலாசாரம் எனப் பல இருக்கின்றன. "இந்தக் கலாசாரங்களின் முக்கிய தன்மைகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது இந்துஸ்தானியின் அடிப்படை அமைப்பையும், தன்மைகளையும் பாதிக்காமலிருக்க வேண்டும்" என அந்தச் சட்டம் கூறுகிறது. 'இந்துஸ்தானி' என்பதைவிட 'உருது' என்று போட்டிருந்தால் சரியாக இருந்திருக்கும். இந்தி மொழியை வளப்படுத்துவதற்கான வழிவகைகளும் அரசியல் சட்டத்தில் குறிக்கப் பட்டுள்ளன. அந்த அரசியல் சட்டப் பிரிவை முழுவதும் ஒப்புக் கொள்ளலாம். ஆனல் முதலில் இந்தியை வளமான, தகுதியான, இங்குள்ள கலாசாரங்களையும் மொழிகளையும் பிரதிபலிக்கக்கூடியவகையில் உள்ள மொழியாக ஆக்கிக்கொண்டு வாருங்கள்! பின்பு அரசாங்க மொழிப்பற்றிய பிரச்சினையை அமைதியாக, பொறுமையாக, புத்திசாலித்தனமாக நாம் விவாதிக்கலாம். அதுவரைப் பேச, எந்த அடிப்படையும் இல்லை.

இந்தி என்ற பெயரின் கீழ் ஏராளமான மொழிப் பிரிவுகள் ஒன்ருக்கிக் காட்டப்படுகின்றன, இந்திப் பிரச்சினையை ஆராயும்பொழுது இந்த உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. வேறுபட்ட பல வகை மொழிகளுக்கும் 'இந்தி' என்ற பெயரில் சேர்க்கப்பட்ட போதிலும், அந்த மொழிகள் ஒவ்வொன்றும் பலவித வேறுபாடுகளால் பிரிக்கப் பட்டுள்ளன. ஒரு வகை 'இந்தி' பேசுபவர்கள், மற்ருெரு வகை 'இந்தி' பேசுபவர்கள் கூறுவதைப் புரிந்து கொள்ள முடியாது. இருந்தாலும் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாத நிலையிலிருக்கும் பல வகை மொழிகளும் 'இந்தி' என்ற தலைப்பில் போடப்பட்டு விட்டன.

அண்மையில் பார்லிமெண்டில் ஒரு இந்தி மெம்பர் பேசிய இந்தி தனக்குப் புரியவில்லை யென பிரதமர் கூறினர்!

காசிப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த பொழுது, உத்திரப் பிரதேசத்து மாணவர்கள் பேசும் இந்தியை பீகார் மாநிலத்து மாணவர்கள் புரிந்து கொள்ளாமல் திண்டாடுவதை நான் பார்த்திருக்கிறேன்!

இந்தியில் பல விதங்கள் இருக்கின்றன. சில இலக்கியம் என உள்ளவை, சில இலக்கியமில்லாதவை. சில 'இந்தி' வகைகள் பேசும் மொழிகளாக மட்டும் இருக்கின்றன. அவைகள் எழுதப்படுவதில்லை; இப்பொழுதுதான் சில 'மொழியாக' அமைக்கப்பட்டு வருகின்றன! துளசிதாஸ், இராமயணம் எழுதப்பட்ட 'பிரஜ் பாஷா' மொழிக்கும் டில்லியில் பேசப்படுகிற இந்தியும் ஒரே வகையல்ல. தமிழ், உருது போன்ருே, அல்லது பின்னல் வளர்ந்த மலையாளம், கன்னடம் போன்ருே, வளர்ந்து பண்பாட்டு அடைந்து ஒழுங்கான நிலையை இந்தி இன்னும் அடையவில்லை.

ஆட்சி மொழிக் குழுவில் இருந்தவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளில் நான்கு ஆண்டுகள் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமெனப் பெரும்பான்மையாக இருக்கிறவர்கள் வற்புறுத்தினர்கள், அந்தந்தப் பகுதி மொழி தாழ்த்தப்படக் கூடாதென சிறுபான்மையாக இருந்தவர்கள் வாதாடினர்கள். ஆங்கிலத்தை அடியோடு அகற்றுவதென்பது கூடாது என அவர்கள் கூறினர்கள். ஆட்சிமொழிக் குழுவைப் பற்றிய 344(3) அரசியல் சட்டத்தில், தொழில் வளர்ச்சி, கலாசார சிறப்பு, விஞ்ஞான அறிவு இவைகளிலும், மத்திய அரசாங்க வேலைகளிலும் இந்தியல்லாத மொழியினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்! என எழுதப்பட்டுள்ளது. இந்த அரசியல் சட்டம் 344(3) பிரிவை வைத்துதான் இந்த ஆட்சிமொழி மாநாடு தனது நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைக்கிறது.

இப்பொழுது ஆட்சிமொழிக் குழுவினர் கூறுகிற யோசனை- இந்தியை ஆட்சி மொழியாக்கும் யோசனை—எந்த வகையில் நமது தொழில் துறைக்கு, கலாசாரத்துக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்குப் பயன்படப் போகிறது? எந்த வகையில் இந்தியல்லாத மற்ற மொழியினர்களின் உரிமைகளுக்கு மதிப்புத் தருவதாக இருக்கிறது! 'ஒன்றும் இல்லை!' என்ற பதிலைத்தான் பெறமுடியும்.

போலிக் கௌரவத்தில் ஆங்கிலத்தை விரட்டிவிடுவதென்று இந்தியாவில் சிலர் முடிவு செய்கிருர்கள். இந்தியாவுடனே, அமெரிக்காவுடனே எந்த வகையிலும் நட்புரிமை பாராட்டாத சீன, ஆறு வாரங்களுக்கு முன் தங்களுடைய சீன எழுத்துக்களுக்குப்பதில் லத்தின் (அல்லது ஆங்கில மொழி) எழுத்துக்களை உபயோகப்பதென முடிவு செய்துள்ளது. ருஷியா, நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளில், நடுநிலைப்பள்ளிகளில் ஆங்கிலம் இரண்டாம் பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

ஒரு மொழி நான்கு விதங்களில் உதவுகிறது. ஒரு கலாசாரத்தின் இருப்பிடமாக மொழி இருக்கிறது, வாணிபம் செய்வதற்கு மொழி உதவுகிறது, வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ள மொழி தேவைப்படுகிறது. தாய் மொழியாகவும் அது இருக்கிறது. குழந்தைப் பருவத்தில் பேசவும், சற்றுக்கொள்ளவும் ஆரம்பிப்பது தாய் மொழியில் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது

ஆங்கிலத்திலுள்ள நூல்களையெல்லாம் இந்தியில் மொழி பெயர்த்து விடலாமென்று சிலர் கூறுகிருர்கள். இலட்சக் கணக்கில் ஆங்கில நூல்கள் குவிந்த வண்ணமிருக்கின்றன. அவற்றை மொழி பெயர்ப்பதென்ருல், நேரம் போதாது, பொருளாதார வசதியும் கிடையாது. இந்தியில் மொழி பெயர்க்கப்படும் புத்தகங்களை எனக்கு ஒரு சமயம் ஒரு நூல் நிலையத்தார் காட்டினர்கள். ஒரு ஆங்கில நூலை இந்தியில் மொழி பெயர்க்க ஆரம்பித்தார்களாம். அதற்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. இந்தி மொழி பெயர்ப்புத் தயாரான நிலையில், இவர்கள் எடுத்துக்கொண்ட ஆங்கில நூலின் இரண்டாவது பதிப்பு வெளி வந்துளளதாகச் செய்தி வந்ததாம். ஆக, மீண்டும் மொழி